விலை ரூபா 1:25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 புரட்டாதி 18 முஹர்ரம் 29 இதழ் 236
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 4-10-1986

வவுனியா–ஹொரவப்பொத்தானை வீதியில்

## கண்ணிவெடித் தாக்குதல்: படையினர் இருவர் பலி

வவனியா, வெள்ளி

வவனியா ஹொரவப்பொத்தானை வீதியில் மூதலாம் கட்டையடியில் பிரயாணிகள்பஸ் ஒன்றுக்கு பாதுகாப்பாக வந்த படையினரின்வாகனமொன்று போராளிகளின் கண்ணிவெடியில் சிக்கியதால் இராணுவத்தினர் இருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.

மாமடுவவிலிருந்து வந்தபிரயாணிகள் பஸ்வண்டிக்குப் பாதுகாப்பளிக்கு மு க மா க இராணுவத்தினர் வாகனம் ஒன்றில் வந்தபோதே இக் கண்ணி வடிச்சம்பவம் நடைபெற்றது.

இக்கண்ணிவெடிச் சம்பவத்தினையடுத்து படையினர் கண்டபடி துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர் இத்துப்பாக்கிப்பிரயோகத்தில் சுவாமிநாதன் (வயது52) என்பவர் படுகாயமடைந்தார்.

காயமடைந்த சுவாமிநாதன் குடல் வெளியேறி

[5ம் பக்கம் பார்க்க]

## சாம்பல்தீவில் புலிகள்-இராணுவம் கடும் சமர்; படையினர் 10 பேர் பலி

### மொரவவவில் கண்ணிவெடி: 9 சிப்பாய்கள் கொலை

யாழ்ப்பாணம், சனி

திருமலைமாவட்டத்தில் உள்ள சாம்பல்தீவில் தமிழீழ விடுதலைப்புலிப் படையின் கெரில்லா அணியினருக்கும் இராணுவத்தினருக்குமிடையில் நடைபெற்ற கடுமையான நேரடி மோதவில் 10 இராணுவத்தினர் பலியானுர்கள்; பலர் படுகாயமுற்றனர்.

மொரவேவவில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் ஜீப்வண்டிசேதமுற்றுக சேதமடைந்ததுடன் அதிலிருந்த 9இராணுவத்தினர் பலியானுர்கள.

தமிழீழவிடுதலைப் புலிகள் அமைப்புவிடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

நேற்று முன்தினம் அதிகாலை 5மணியிலிருந்து இலுப்பங்குளம், கன்னியா, அலஸ்தோட்டம், மிதந்தபுரம் ஆகிய இடங்களில் உள்ள இராணுவ முகாம்களில் இருந்து பலநூற்றுக் கணக்கான இராணுவத்தினர் ஸ்கவுட்கார்களிலும். மற்றும் வாகனங்களிலும் வந்து சம்பல்தீவு, 6ம் கட்டை ஆகிய இடங்களில் புதிய முகாம்களை அமைப்பதற்காக முனைந்தசமயம் எமது வீரர்கள் எதிர்த்தாக்குதலை மேற்கொள்ளத் தொடங்கினர்.

கடற்படையினரின் பீரங்கிப் படகுகள் மூலமும் இராணுவத்தினர் வந்திறங்கினா.

(5-ம் பக்கம் பார்க்க)

சிறைச்சாலை,தமிழ் உண்ணுவிரதிகளுக்கு திங்கள்முதல் ஆதரவாக

# யாழ்.கச்சேரி அதன் பிரிவுகள் செயலிழக்க நடவடிக்கை

## மாணவகூட்டமைப்பின்முடிவு

(அலுவலக நிருபர்)

சிறைகளில் சாகும்வரை உண்ணுவிரதமிருந்துவரும் தமிழ் இளைஞர்கள் யுவதிகளின் உண்ணுவிரதப் போராட்டம் முடியும்வரை யாழ். செயலகத்தையும் அதன்பிரிவுகளையும் நாளைமறுதினம் திங்கள் முதல் செயலிழக்கச் செய்வதென்று சகலவிடுதலை இயக்கங்களின் மாணவ அமைப்புக்கள் - ஏனைய மாணவ அமைப்புக்கள் சார்பாக மாணவ அமைப்புக்களின் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

மேலும் தியேட்டர்கள், மினி சினிமாக்கள், உள்ளூர் தொலைக்காட்சி நிலையங்கள் காலவரையின்றி மூடப்படவேண்டுமென றும்பொதுஇடங்களில்நடைபெறும் களியாட்டங்கள் ஆடம்பரத் திருவிழாக்கள் நிறுத்தப்படவேண்மென்றும் மாணவ அமைப்புகளின் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

### ச. ச. நிலையங்கள் அழைப்பு

மாணவ அமைப்புக்களின் கூட்டமைப்பு முன்னெடுத்துச் செல்லும் போராட்டத்தை விரிவுபடுத்து முகமாக யழ். மாவட்டத்திலுள்ள சகல சனசமூக நிலையங்களினதும் இரு பிரதிநிதிகள் வீதம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் யாழ். பல்கலைக்கழகத்திற்கு வந்து கூடுமாறும் மாணவ அமைப்புக்களின் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது

## கண்ணிவெடிக்குநால்வர்பலி; ஜீப் வண்டி பலத்த சேதம்

### - அரசு அறிவிப்பு

மொறவெவவுக்கு அரசாங்க உத்தியோகத்தர்களை ஏற்றிச் சென்றஜீப்வண்டி பன்குளத்தில் கண்ணிவெடிக்கு இலக்காகி பலத்த சேதமடைந்தது.

இச்சம்பத்தில், மொறவேவ உதவி அரசாங்க அதிபர் ஜி. பி விஜயசுந்த, மொறவெவ தபாலதிபர் எம். ஏ.சிறிசேன, ஜீப் வண்டியின் சாரதி ஜி. எம். நீல்சில்வா, ஆண்தாதி ரேணுக குணசேகரா ஆகியோர் ஸ்தலத்தில் பலியானுர்கள் என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ)

கொழும்பு, வெள்ளி அநுராதபுரத்திலிருந்து

### பிந்திய செய்தி

[நமது நிருபர்]

பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகளுள் ஒருவரான திரு சநதிராவிக்கிரமசிங்க, நேற்றுக்காலை வெலிக்கடைச் சிறைச் சாலைக்குச் சென்று உண்ணுவிரதிகளை நேரில்பார்த்ததுடன் அவர்களின் 5 அம்சக் கோரிக்கைகள் பற்றி ஆராய்ந்து, கலந்துரையாடியதாக நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது. (மா)

இதோ வெளிவந்து விற்பனையாகிக்கொண்டிருக்கிறது!

### சீவம் இண்டஸ்றீசாரின் தீபாவளி வாழ்த்து மடல்கள்

விலை விபரம்

| | | | |
|---|---|---|---|
| No. 1. | கட்டிங்காட் | 100க்கு | 550/- |
| 2. | இருபக்க ஆட்போட் படம் | " | 300/- |
| (2) | இருபக்க ஆட்பேப்பர் | " | 300/- |
| 3. | கட்டிங் காட் | " | 250/- |
| 4. | இருபக்க ஆட்போட் | " | 250/- |
| 5. | கட்டிங் காட் | " | 200/- |
| 6. | பெரிய இருமடிப்பு | " | 200/- |
| 7. | இரு மடிப்பு பூ காட் | " | 100/- |
| 8. | சிறிய ஒரு மடிப்பு | " | 50/- |
| | போஸ்ற்காட்(சினிமாப்படம்) | | |
| | பெரியது | " | 70/- |
| | சிறியது | " | 27/- |

தொடர்புகொள்ளவும்;

சீவம் இண்டஸ்றீஸ்,

மாவிட்டபுரம் கிழக்கு, தெல்லிப்பளை. (C4966)

வவுனியா, மாமடுவில்

## 'ஹெலி'போராளிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது; 4 படையினர் பலி

### -ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், சனி

வவனியாவில் உள்ள மாமடுவ என்னும் இடத்தில் தமது போராளிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையே ஏற்பட்ட நேரடி மோதலின் போது இராணுவத்தினருக்கு ஆதரவாக வானத்திலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் நடத்திக் கொண்டிருந்த ஹெலிகொப்டரை நோக்கி எதிர்த் தாக்குதல் நடத்தியதியதில் ஹெலி சேதமுற்ற நிலையில் விழுந்து நொறுங்கியதாகவும் இதில் பயணம் புரிந்த 4இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகவும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

[5-ம் பக்கம் பார்க்க]

## கடையடைப்புப் போராட்டம் நேற்றுடன் முடிவுற்றது

யாழ்ப்பாணம், சனி

யாழ் நகரில் மூடப்பட்டிருந்த வர்த்தக நிலையங்கள் யாவும் இன்று தொடக்கம் மீண்டும் திறக்கப்பட்டு வழமைபோல இயங்கும்.

பொது மக்களின் நலனைக்

(8ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பருத்தித்துறை பஸ் நிலையத்திற்கு அருகாமையில் ஒரு பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்க:- திரு. ப. ப. தாமு ஆசிரியர், ''தங்கமணி வாசா'', துன்னாலை தெற்கு, கரவெட்டி. [C-4927]

4 Burner Elec. Cooker, Gas Cooker, Washing Machine, Sony 20'' T V. and Pedastral Fan, For Sale அருள்தாஸ், 10 மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். [C-4971]

Honda 125 விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- தம்பிராஜா, சிவசக்தி வைத்திய நிலையம், கண்டி வீதி, புங்கன்குளச் சந்தி. [C-4972]

நவீன வீட்டுத் தளபாடங்கள் அலுமாரி, கட்டில், Foam Rubber ஹோல் செற், Formica வட்ட சாப்பாட்டு மேசைகள், தேக்கு Show case, நாஷனல் T. V., சுசற் றேடியோ, பீங்கான், கிளாஸ் வகைகள், Pressure Cooker, எவர்சில்வர் பாத்திரங்கள், பியர்கிளாஸ் Chest of Drawers சிங்கர் மெசின், Fan மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென். சாவிஸ் பாடசாலையருகில்) C 4967

உரும்பராய் கிழக்கில் கோப்பாய் றோட்டில் (கற்புலம்) கிணற்று வசதியுடனும், பாதையுடனும் வீடு கட்டக் கூடிய 5 பரப்பு காணி விற்பனைக்குண்டு தொடர்பு: அ. சுப்பிரமணியம் [இரும்புக் கடை உரிமையாளர்.] டிப்போ அருகில், கோண்டாவில். (C 4956)

வீட்டுப் பாவனைக்குரிய பொருட்கள் Fridge Gurundig 20'' Colour T V., National 17'' B/W T. V. Children's Cycle, Pram Zink என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: 333, Navalar Road, Jaffna. C4989

Lohmann Pullets, Broilers and Cockerels பேட்டுக்குஞ்சு, புரொயிலர் குஞ்சு. சிவப்பு சேவற்குஞ்சுகள் நவம்பர் மாதம் விநியோகப்படும். உடன் முன்பதிவு செய்யவும்: Nallur Farm Centre, [நல்லூர் வீடியோ சென்ரர்] நல்லூர் - யாழ்ப்பாணம். [C 4986]

## மணப்பந்தல்

யாழ்ப்பாண கத்தோலிக்க குருகுல மணப்பெண்ணுக்கு 33-39 வயதுக்கிடைப்பட்ட நடுத்தரவகுப்பான மணமகன் தேவை. செவ்வாய்குற்றமுள்ள இந்து வேளாள எஞ்சினியர் மணப் பெண்ணுக்கு 31-38 வயதுக் குட்பட்ட மணமகன் தேவை. இந்து உயர்குல [Vegitarian] மணப்பெண்ணுக்கு 38-45க்குஇடைப்பட்ட மணமகன் தேவை. இந்து பள்ளர் இளபட்டதாரி மணமகனுக்கு 37 வயதுக்குட்பட்ட மணப்பெண்தேவை வேளாள கிறிஸ்டியன் உத்தியோகமான பெண்ணுக்கு 28-40 வயதுக்கிடைப்பட்ட மணமகன் தேவை. வேளாள இந்து அரசாங்க மணப்பெண்ணுக்கு 30 வயதுக்கு மேற்பட்ட மணமகன் தேவை. இந்து வேளாள எக்கவுண்டன் பெண்ணுக்குகுற்றமுள்ள 36-42 வயதுக்கிடைப்பட்ட மணமகன் தேவை. மங்கள ஏஜன்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [C 4954]

## தேவை

சகல வசதிகளுடனும் தொலைபேசி உட்பட மேல் மாடிவீடு வாடகைக்குத் தேவை. சுண்டுக்குளியில்விரும்பத்தக்கது தொடர்பு: திருஞானஸ் கட்டிடம், யாழ்ப்பாணம். [C 4978]

யாழ்-மதுரஞானசபா தயாரிக்கும் யாழ்ப்பாண வரலாற்றுத் திரைப்படத்தில் நடிகைகள், நடிகர்கள், பின்னணிப் பாடகர்கள், மேக்கப்பாளர் தேவை 10-10-86முன் புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும். 140, அரசடிவீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம். [C 4980]

6, 7, 8, 9ம் வகுப்புகளுக்கு கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை. 8-10-86 ல் நேரில் வரவும். [8-00 a m. to 3-00 p m.] ரோயல் இன்ஸ்ரிரியூட், நவாலி, சிந்தாமணிப் பிள்ளையார் கோவிலடி. [C 4982]

சகல வசதிகளுடனும், தொலைபேசி உட்பட யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் 3 அல்லது 4 அறை கொண்ட பெரிய வீடு வாடகைக்கு தேவை. நல்லூர், சுண்டுக்குளி பகுதி விரும்பத்தக்கது. தொடர்பு கொள்ள வேண்டியமுகவரி: 292/2, Navalar Road, Jaffna. Tel 24169. (C 4930)

வண்ணார்பண்ணை இந்துக் கல்லூரி நாவலர் பாடசாலைகளுக்குச் சமீபமாய் சிறிய வீடு வாடகைக்குத்தேவை. தொடர்பு: 43, கொய்யாத் தோட்டம், புதுவீதி. [C 4950]

திருநெல்வேலிப் பகுதியில் கட்டிட நிர்மாண வேலைத்தளமொன்றிற்கு அனுபவம் வாய்ந்தமேசன், கூலியாட்கள், தளபாடவேலை செய்யக்கூடிய தச்சுத்தொழிலாளர் தேவை. ஞாயிறு 5-10-86 அன்று காலை 9 மணிக்கும் 12 மணிக்குமிடையில் கீழ் குறிப்பிட்டுள்ள விலாசத்திற்கு நேரில்வரம். அகதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். K. ஐயாத்துரை, மரக்காலை, K. K. S றோட், மருதனமடம். [C 4955]

## வகுப்புகள்

Spoken English, புதிய பிரிவு ஆரம்பம்: 4-10-86 சனி/ஞாயிறு மாத்திரம். மாலை 5-7 வரை. 12, வைமன் வீதி, நல்லூர்; S. B. Iyar. C 4850

A/L 87 புலமிகள் ஆரம்பம் 04-10-1986 Sat and Sun 2 P M 3-15 P M அத்துடன் 87 பௌதிக துரித மீட்டல் வகுப்பும் ஆரம்பமாகியுள்ளது ஆசிரியர் ரவீந்திரநாத் B sc 3rd Cross, Street, Jaffna. (P. M. C. க்கு முன்பாக) (C-4949)

108 Brown Rd. A/L 87 பொது இரசாயனம். ஆசிரியர் சத்தீஸ், புதிய வகுப்பு ஆரம்பம்: 05-10-1986 ஞாயிறு 2-30 p. m. கிழமைக்கு 4மணி நேர வகுப்பு. நேரம்: சனி, ஞாயிறு 2-30 p m.- 4-30 p.m. [C 4945]

87-ம், 88-ம் ஆண்டிற்கான G C.E A/L வகுப்புகள் 16-10-86 ஆரம்பமாகின்றன. விபரங்களுக்கு; S. அருள்நங்கை 73, உயர்கலைக்கல்லூரி, யாழ்ப்பாணம். C 1425

City and Guilds London Examination, மோட்டர் றீவைண்டிங், ரான்ஸ்போமர் வைண்டிங், Factory, வீட்டு வயறிங், ஓட்டோ வயறிங் ஆகிய பயிற்சிகள் ஆரம்பம்: 15-10-86 OMEGA, Manipay Road, Jaffna. [ஈழநாட்டிற்கு எதிரில்] [C4969]

## கல்வி

பிற்மன் லண்டன் பரீட்சைகள் சுருக்கெழுத்து, தட்டெழுத்து மற்றும் பாடங்களில் 12-10-86ல் எமது நிலையத்தில் நடைபெறும். பரீட்சை நேர அட்டவணை, பிரவேசப் பத்திரம் ஆகியவற்றை பரீட்சார்த்திகள் பெற்றுக் கொள்ளவும். 87 மார்ச் பரீட்சைகளின் விண்ணப்பமுடிவு 31-12-86. வெளி மாணவர்களும் தோற்றலாம். S. T. C. A. 410 [594], கே. கே. எஸ். வீதி, [மனோகரா சந்தியிலிருந்து காங்கேசன் துறை நோக்கி 100யார்] யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்தில் கிளைகள் இல்லை. [C 4968]

## வைபவம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சனி

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் அண்மையில் நடாத்தப்பட்ட புதிய மத்தியஸ்தர்களுக்கான முன்னோடிப் பரீட்சையில் சித்தி பெற்றோருக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் பின்போடப்பட்டுள்ளது.

மேற்படி வைபவம் நாளை யாழ்ப்பாணம் சென். சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெறுமென முன்கூட்டியே ஆயத்தங்கள் செய்யப்பட்டிருந்தபோதிலும் இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க பிரதிநிதிகள் யாழ்நகர் வருவதை முன்னிட்டே இவ் வைபவம் பின்போடப்பட்டுள்ளதாக யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர்சங்கக் காரியதரிசி திரு. ஏ. தேவராசா தெரிவித்தார்.

இச்சான்றிதழ்கள் இம்மாதம் 26ம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலத்தில் இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர்சங்கப் பிரதிநிதிகள் முன்னிலையில் வழங்கப்டுமெனவும் காரியதரிசி தெரிவித்தார்.

பருத்தித்துறை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினரும் இம்மாதம் 11-ம்,

(7-ம் பக்கம் பார்க்க)

## சேவை

யாழ். சைனீஸ்றெஸ்ரோரன் முதலாம் குறுக்குத்தெரு, பலரின் வேண்டுகோளுக்கு இணங்க எங்களுடைய ஸ்தாபனம்தினசரி இரவு 8-30 மணி வரை திறந்திருக்கும். தொலைபேசி இல: 23460 (C 4790]

காலை முதல் மாலைவரை எந்நேரமும் பஸ் நிலையத்தில் ''போட்டோ ஸ்ரட்'' பிரதிகளை எடுத்துக்கொள்ள மக்மிலன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். [C4835]


### நெசவாளர் தேவை

வல்லை நெசவாலைக்கு உடனடியாக நெசவாளர் தேவை. சம்பளத்துடன் விசேட படிகளும் வழங்கப்படும். தங்குமிடவசதி உண்டு. ஆலைக்கு நேரில் வரவும். அல்லது தொடர்பு கொள்க.

ஆய்வு நிறுவனம்,
81/1, K. K. S Road,
Kokuvil.
வல்லை, உடுப்பிட்டி.

(C 4974)

HOME LIKE HOSPITALITY
IN THE HEART OF THE CITY

### HOTEL GNANAMS

* A/c or non A/c Rooms with Attached Baths
* WELL-STOCKED BAR
* BANQUET AND MEETING FACILITIES
* CHINESE MEALS — Rs. 25/- — 40/-

Etc. Etc. Etc.

இவை தவிர,
சனி, ஞாயிறு தினங்களில்
இனிய மாலைப்பொழுதில்
இதமான சூழலில்

Beer Garden Night

Chilled Beer with Spanish Omelette Rs. 30/-

உங்கள் நலன் கருதி
காலை 9-00 முதல் மாலை 11-30 வரையிலான சேவை.

299 CLOCK TOWER ROAD, JAFFNA. T/phone; 22082 23067

(A-1381)


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
கதிரவேலு
சின்னத்தங்கம்

தோற்றம்: 16-05-1934
மறைவு: 04-10-1985

அன்பின் திருவுருவாய் ஆற்றலின் உறைவிடமாய் அல்லும் பகலும் அயராது எம்மையெல்லாம் வழிநடத்திய அன்புத்தெய்வமே நீர் மறைந்து ஓராண்டு சென்றாலும் உங்களது நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில் என்றும் அகலாது நிறைந்து நிற்கும். தங்கள் பிரிவால் துயருறும் அன்புக் கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

கிளாலை, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை
(C 4990)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



(அல்லாரை வெற்றியரின் மகள்- கொடிகாமம் விருசித் தம்பியின் மனைவி- அல்லாரை (காலஞ்சென்ற வி ஆறுமுகத்தின்) தாயார்-

திருமதி
பாறுப்பிள்ளை
விருசித்தம்பி

மலர்வு: 03-04-1918
உதிர்வு: 04-09-1986

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்: மகன் விருசித்தம்பி முருகேசபிள்ளை, மருமகள்: திருமதி செல்வநாயகி முருகேசபிள்ளை, பேரப்பிள்ளைகள்: மு. இராமேஸ்வரன், மு. கேதீஸ்வரன், மு. சிறீதரன், மு. சேர்தன், உற்றார், உறவினர்கள்.

அல்லாரை தெற்கு,
மீசாலை. (C 4979)

## மின்தடை

இலங்கை மின்சாரசபையின்

### முக்கிய அறிவித்தல்

1986—10—05ந்திகதி ஞாயிற்றுக்கிழமை சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வரும் 33 KV மின் பாதையில்அவசர திருத்த வேலைகள் செய்ய இருப்பதால் காலை 8-00 மணி தொடக்கம் மாலை 2-00 மணி வரை யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்திருக்கும் பெரும்பாலான உபமின் நிலையங்களுக்கும், கோண்டாவில், கொக்குவில், திருநெல்வேலி, இராஜவீதி, கோப்பாய், இருபாலை, மானிப்பாய், ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகளுக்கும் மின்விநியோகத் தடை ஏற்படுமெனச் சகலமின் பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

இம் மின்தடையால் ஏற்படும் சகல மின் நுகர்வோரிடமிருந்தும் அவர்களுக்கு ஏற்படும் வசதியீனங்களுக்காக இலங்கை மின்சாரசபை தனது மனவருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

இப்படிக்கு,
மின்பொறியியலாளர்,
யாழ் பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சாரசபை,
சுன்னாகம்.

(A-1431)

# தென்னுபிரிக்கா மீது அமெரிக்கா விரிவான பொருளாதாரத் தடை!

## றீகனின் வீட்டோ முழுமையாக நிராகரிப்பு!

வாஷிங்டன், அக் - 3

**தென்னுபிரிக்க அரசுக்கு எதிராக அமெரிக்கா பரந்தளவிலான புதிய பொருளாதாரத்தடைகளை விதித்துள்ளது. அமெரிக்க அதிபரினுல் அவரின் 'வீடடோ' ரத்து அதிகாரம்மூலம் இத்தடை ரத்துச்செய்யப்பட்டிருந்தது. ஆயினும் அதிபர் றீகனின் இந்த வீட்டோ தடையை அமெரிக்க செனட், மற்றும் பிரதிநிதிகள் சபை ஆகியன நிராகரித்ததையடுத்து தென்னுபிரிக்கா மீதான அமெரிக்க பொருளாதாரத்தடை செல்லுபடியாயிற்று.**

அமெரிக்க காங்கிரஸில் தென்னுபிரிக்காமீது விரிவான பல பொருளாதாரத் தடைகளை பிரதிநிதிகள் சபை கொண்டுவந்திருந்தது. ஆயினும் திரு. றீகன் இதனைத் தமது 'வீட்டோ' அதிகாரம் மூலம் ரத்துச்செய்திருந்தார்.

தொடர்ந்து திரு றீகனின் இந்த வீட்டோ ரத்தை அமெரிக்க காங்கிரஸின் செனட் சபை நிராகரித்தது.

செனட் சபையில் 78 வாக்குகள் தென்னுபிரிக்கா மீதான தடைக்கு ஆதரவாகவும், 27 வாக்குகள் எதிராகவும் கிடைத்தன. இதனையடுத்து மூன்றில் இரு பெரும்பான்மை பலத்துடன் றீகனின் வீட்டோ நிராகரிக்கப்பட்டு. தென்னுபிரிக்கா மீது பொருளாதாரத் தடை கொண்டுவரப்பட்டது.

தென்னுபிரிக்கா மீதான திரு. றீகனின் நிலைப்பாடு நிராகரிக்கப்பட்டது, அவரது வெளிநாட்டுக் கொள்கை தொடர்பாக அவருக்குக் கிடைத்த முதலாவது தோல்வி என்று தெரிவிக்கப்பட்டது.

தென்னுபிரிக்கா மீதான அமெரிக்காவின் பொருளாதாரத்தடை, நிலக்கரி, இரும்பு. உருக்கு. யுரேனியம் ஆகியவற்றின் இறக்குமதியிலும், தென்னுபிரிக்க வேளைப் பொருள் உற்பத்திகளிலும் கொண்டுவரப்படும்.

இத்துடன் தென்னுபிரிக்க விமானங்களுக்கு அமெரிக்காவில் தரை இறங்கவும் தடை விதிக்கப்படும்.

தென்னுபிரிக்கா அதன் இன ஒடுக்கல் கொள்கைகளைக் கைவிடாத பட்சத்தில் அடுத்த ஆண்டு அதன்மீது மேலும் பலமான தடைகள் விதிக்கப்படும் என்று அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## பிரேஸிலில் தங்கச் சுரங்க விபத்து: 12 பேர் பலி!

லண்டன், அக் 3

வட பிரேஸிலில் தங்கச் சுரங்கமொன்றில் ஏற்பட்ட விபத்தில் 12 பேர் கொல்லப்பட்டனர். 20 பேர்காயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று இடம் பெற்றது. மராமா என்ற வட பிரேஸில் பகுதியிலேயே அச்

[6-ம் பக்கம் பார்க்க]

## ஆப்கானிலிருந்து சோவியத் துருப்புகள் வாபஸ்

உலகச் செய்திகள்

ஒட்டாவா, அக் 3

ஆப்கானிஸ்தானிலிருந்து இன்னும் சில தினங்களில் சோவியத் துருப்புக்கள் வாபஸாகும் என்று சோவியத் வெளிநாட்டமைச்சர் செவத்நாட்ஸ தெரிவித்துள்ளார்.

கனடாவின் ஒட்டாவா நகரில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மகாநாடொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆயினும் ஆப்கானிஸ்தானிலுள்ள சோவியத் துருப்புகளில் எத்தனைபேர் விலகிக்

[6ம் பக்கம் பார்க்க]

## பிரதமர் ராஜீவ் கொலை முயற்சி:
# பாதுகாப்பு அதிகாரிகள் பலர் தற்காலிக வேலை நீக்கம்

புதுடில்லி அக் 3

'ராஜ்காட்' காந்தி சமாதியில் இடம்பெற்ற இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி மீதான கொலை முயற்சி தொடர்பாக பல பாதுகாப்புச்சேவை அதிகாரிகள் தற்காலிக வேலை நீக்கஞ்செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் ராஜீவின் பிரத்தியே பாதுகாப்புக்கென நியமிக்கப்பட்ட 250 பேர் கொண்ட அதிகாரிகள் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கொலை முயற்சியில் இறங்கிய நபர் மீதான விசாரணைகள் தீவிரமடைந்துள்ளன. தமது பெயரைத் தேசாய் என்று அவர் முதலில் குறிட்பிட்டிருந்தார் ஆயினும் தொடர்ந்து பதிலளிக்கையில் வேறு பெயர்களையும் தகவல்களையும் கூறி மாருட்டத்தில் ஈடுபட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆயினும் இந்த நபர் 20 வயதான ஓர் 'இந்து' என்று தெரிவிக்கபபட்டது. இவர் ஒரு சீக்கியரோ, மூஸ்லிமோ அல்லது வேறு இந்திய சமூகத்தைச்சேர்ந்தவரோ அல்ல என்றும் தெரியவந்துள்ளது.

ராஜ்காரிட்டில் நேற்று முன்தினம் திரு காந்தியின் பாதுகாப்புக்கென 250 பேர் கொண்ட பாதுகாப்புச்சேவை அதிகாரிகள் அணி சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. இருந்தபோதிலும் இவர்களையும் மீறி அந்த துப்பாக்கி நபர் செயல்பட்ட விதம் பலரையும் ஆச்சரியத்திலாழ்த்தியுள்ளது.

இதேவேளை திரு. ராஜீவ் காந்தியின் பிரத்தியேக பாதுகாப்புக்கென 1500 பேர் கொண்ட பாதுகாப்புச் சேவைப் பிரிவு நிரந்தரமாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க பிரான்ஸ் பாகிஸ்தான். பங்களாதேஷ், இலங்கை மற்றும் பல நாடுகளின் தலைவர்கள் திரு காந்தி மீதான கொலைமுயற்சி முறியடிக்கப்பட்டதுகுறித்துமகிழ்ச்சி வெளியிடடுள்ளனர்.

## 6 பேர் மட்டுமே காயம் 'புல்லட் புறூப்'வில் ராஜீவ்!

புதுடில்லி, அக்3

ராஜ்காரட்டில் திரு. ராஜீவ் காந்திமீது மேற்கொள்ளப்பட்ட கொலைமுயற்சியின்போது ஆறுபேர்வரை காயமடைந்தனர்.

இவர்கள் பொலிஸ் பிரிவை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. துப்பாக்கிச் சன்னங்கள் சிதறியமையால் இவர்கள் சிறிய காயங்களுக்குள்ளானுர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை திரு. ராஜீவ் காந்தி மற்றும் ஜனுதிபதி ஸெயில்சிங் ஏனைய உயர் அதிகாரிகள் ஆகியோர் எவ்வித பாதிப்புமின்றி உயிர் பிழைத்தனர்

திரு. ராஜீவ்காந்தி இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது குண்டுகள் துளைக்காத 'புல்லட் புறூவ்' சட்டையை அணிந்திருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

## பிரார்த்தனை

யாழ்ப்பாணம், சனி

வெலிக்கடை, பூஸா, தங்காலை சிறைகளில் உண்ணுவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக இன்று யாழ்ப்பாணம் வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் நண்பகல் 12 மணி முதல் ஒரு மணிவரை கறுப்புப்பட்டியணிந்த பிரார்த்தனை ஒன்றை இலங்கைத் தமிழர் வெளிவாரி பட்டதாரிகள் மாணவர் ஒன்றியம் அனுஷ்டிக்கவுள்ளது. [வா]


# எம் டீ சோப்

## வழங்கும் தீபாவளி அதிர்ஷ்டம்

**10 நைலெக்ஸ் சேலைகளைப் பரிசாகப் பெறுங்கள்!**

பங்குபற்றும் முறை

உங்கள் முழுப்பெயர், விலாசம், வயது ஆகியவற்றுடன் உங்களது அல்லது உங்கள் பெற்ருேர், அல்லது பாதுகாவலரின் அடையாள அட்டை இலக்கத்தையும் ஓர் 6 x 3 அங்குல அளவு வெள்ளைக் கடதாசியின் ஒரு பக்கத்திலும் நீங்கள் சவர்க்காரம் வாங்கிய கடையின் பெயர், விலாசம் ஆகியவற்றை மறுபக்கத்திலும் எழுதி அத்துடன்

5 எம் டீ சோப் மேலுறைகளையோ அல்லது 5 எம் டீ நீலசோப் மேலுறைகளையோ அல்லது ஒரு 'எம் டீ பார் சோப்' மேலுறை அல்லது இரண்டு எம் டீ அரைபார் சோப் மேலுறைகளை சேர்த்து அனுப்பவேண்டும்.

ஒருவர் எத்தனை விண்ணப்பங்கள் வேண்டுமாலுைம் அனுப்பலாம்.

★ ஒவ்வொரு பரிசைப் பெறுபவரும் சவர்க்காரம் வாங்கிய கடைக்கு ரூபா 50/- பெறுமதியான பொருட்கள் இனும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:

**எம் டீ என்ரபிறைஸ்,** தொழிற்பேட்டை, அச்சுவேலி.

★ 28-10-86 பிற்பகல் 5-00 மணிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.




# எம் டீ சோப்




**விலை ரூபா 2/- மட்டுமே.**

**தரமான உள்ளூர் உற்பத்திகளை ஆதரியுங்கள்!**

[A-745]

## மணிவாக்கு

பேய் போற் றிரிந்து பிணம்போற் கிடந்து பெண்ணைத்
தாய் போனினைந்து தவமுடிப்ப தெக்காலம்

—பத்திரகிரியார்

# நமது நோக்கு

## ராஜ்காட் சம்பவம்

'வருந்தியழைத்தாலும் வாராத வாரா' என்று மூதாட்டி சொல்லிவிட்டாரல்லவா? மகாத்மாவின் நான்காந்தலைமுறையில் இந்திய நாட்டின் தலைமைக்கு வந்திருக்கும் இன்றைய காந்தி வராத மரணத்துக்குப் பலியாவதெப்படி?

இது பாரதப் பண்பில் எழும் கேள்வி. மகாத்மா காந்தியின் சமாதிக்கு அஞ்சலி செலுத்தப்போன ராஜீவ் அதனை முடித்துக்கொண்டு 'சேவாகிரம்' போகத் திட்டமிட்டிருந்தாரே? துப்பாக்கிக்காரனின் சூட்டிலிருந்து தப் , திட்டமிட்டபடி வார்தா சென்று சேவாகிர ஆச்சிரமத்தின் பொன்விழா கொண்டாட்டத்திற் கலந்துகொண்டாரல்லவா? எனவே ''பொருந்துவன போமினென்றுற் போகா'' என்ற இன்னொரு வரியுடன் ராஜ்காட் சம்பவத்தின் விமர்சனம் முடிவடைகிறது.

தமிழிலே உள்ள நீதிநூல்கள் வேறெந்த மொழியிலும் இல்லை எனலாம். இருப்பினும் இன்று உலகம் போகும் போக்கில் இத்தகைய வினைப்பயன் நம்பிக்கை எவ்வகையிலும் பயனற்றது. இன்று பாரத நாடு அமெரிக்காவின் சீ. ஐ ஏ போல, ரஷ்யாவன் கே. ஜீ பீ. போல புலனாய்வுத்துறை திறம்பட அமைக்கவேண்டிய அவசியத்தை இச்சம்பவம் உணர்த்துகிறது.

பல வருடங்களாகத் திட்டமிடப்பட்ட மகாத்மா காந்தியின் கொலை பிர்லா ஹவுசில் நிறைவேறியது முற்றாக வேறுபட்ட விடயம். எவ்வித பாதுகாப்பும் தேவையில்லை யென்று வற்புறுத்திய மகாத்மா இந்தியாவிற்கு விடுதலை அளித்தார். எண்பது வயதை எட்டி நின்ற 'பல்லில்லாக் கிழவனுக்கு விடுதலை அளிக்க முன்வந்த நதுரன் கோட்சேக்கு எவ்வித தடையுமிருக்கப்படாதென்று வற்புறுத்தியவர் காந்தியடிகள்.

இன்று காந்தி - நேரு இந்திரா - காந்தி என்ற சங்கிலிக்கோவை போல பாரதத்தின் தவப்பயனாகத் தொடரும் செங்கோல் உலகின் பெருமதிப்பைப் பெற்றுள்ளது; அதேசமயம் ஊளையிடும் நரிகளும் ஒட்டி நிற்கும் ஓநாய்களும் பிரதமர் ராஜீவின் உயிருக்குத் திட்டமிடுகின்றன. ஆட்சியை சீர்குலைக்க அவதிப்படுகின்றன.

இந்தியாவுக்கு மட்டுமல்ல அகில உலகுக்குமே இன்றியமையாத பெருந்தலைவரென்று பாராட்டப்படும் இந்தியப் பிரதமர் இத்தகைய அபாயத்துக்குள்ளாவது ஆட்சியின் புலனாய்வுத்துறையின் பலவீனத்தைப் பறைசாற்றுகிறது. காந்தி சமாதிக்கணித்தான புதரில் துப்பாக்கிக்காரன் வந்த மர்மம் என்ன?

லிங்கன் கென்னடி உட்பட பல அரச தலைவர்கள் பலத்த பாதுகாப்பின் மத்தியில் கொலை செய்யப்பட்டார்களென்று வரலாறு கூறுகிறது. ராஜ்காட் சம்பவம் அத்தகையதல்ல. இன்று நாட்டுக்குள்ளும் வெளியிலும் இந்திய ஆட்சியை நிலைகுலைக்க சதிகள் பெருகி வருகின்றன. இதனைக் கவனத்திற்கொண்டு பாதுகாப்பு புலனாய்வுத்துறைகள் திறம்பட இயங்க வேண்டியது மிக மிக அவசியம்.

இப்பாரிய பணிக்கு உதவ பலவெளிநாடுகள் இத்துறையில் நிபுணத்துவம் வழங்க முன்வரும்.

## இதற்கு யார் பொறுப்பு?

லொறி வழிமறிப்புக் கொள்ளைகள் மீண்டும் பலம் பெற்றிருக்கும் வேளையில், இச்சேவை துண்டிக்கப்படுவது தவிர்க்கமுடியாத நடவடிக்கை.

யாழ்ப்பாணம் இன்று தமிழ்ப் போராளிகள் கையில் இருக்கிறதென்று எதிர்க்கட்சித்தலைவர் அநுரா பண்டாரநாயக்கா அடிக்கடி பாராளுமன்றத்தில் குரலெழுப்புகிறார்.

அரசாங்கத்துக்குத் தெரியாத ரகசியம் ஒன்றைத்தான் வழங்குவது போல அவருடைய பேச்சு தோன்றுகிறது.

எத்தனையோ தவறுகள், குழப்பங்கள், கொடுமைகள் கூட இன்று நடைபெறும் போரில் இடம்பெற்றிருக்கின்றன. இருப்பினும் தம் மக்களுக்காக தம்மை அர்ப்பணம் செய்யும் இளம் போராளிகளுக்கு மக்கள் ஆதரவிருப்பது ஆச்சரியமல்ல

இவ்வித போரில் பொது மக்களுக்கு ஏற்படும் துன்பங்கள் தொல்லைகள் தவிர்க்க முடியாதிருப்பதும், அவற்றைநாம் பொறுமையுடன் தாங்கிக்கொள்ள வேண்டியதும் தேசப்பற்றென்ற பண்புக்கு அத்தியாவசியமாகிறது. சிவில் வாழ்க்கையைக் குழப்பமின்றி நிர்வகிக்கும் பொறுப்புடைய அதிகாரிகளின் அவலத்தை நாமறிவோம்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தளவில் நிலைமை மோசமில்லை என்று கொள்வதற்குத் தடையாயிருப்பது இன்று குடாநாட்டைப் பீடித்திருக்கும் லொறிக் கொள்ளை. மக்களைப் பட்டினிபோட்டு மண்டியிடச் செய்யும் ராணுவ முற்றுகைக்கும் இத்தகைய சமூக விரோதக் கொள்ளைக்கும் என்ன வேறுபாடு?

யாழ். வர்த்தக சங்கம், வட பிராந்திய லொறி போக்குவரத்துச் சங்கம், யாழ். முஸ்லிம் போக்குவரத்துச் சங்கம் இவை நடத்தும் சேவை ஸ்தம்பித்திருப்பதால், படையினரால் கொல்லப்படும் பொது மக்கள் போல் பட்டினிச் சாவுக்கு இவ்வித கொள்ளை இட்டுச்செல்கிறது.

பொறுப்புள்ள எந்த இயக்கமும் இதில் ஈடுபடுமென நம்ப இடமில்லை. ஆனால் இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் பொறுப்பும் மக்களைக் காக்கும் இவற்றிற்கு உரியது.

# துணிவையும் பாதுகாப்பையும் அருளும் துர்க்காதேவி

### பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்

துர்க்கைவழிபாடுபழமையும் புதுமையும் உடையதாகும். வேதகாலத்திலே துர்க்கை வழிபாடு சிறப்புடன் விளங்கியது என்பதற்கு துர்கா சூக்தம் என்னும் வேதப்பகுதி நல்ல ஆதாரமாகும். இதேபோல சங்கக லத்தில் துர்க்கை வழிபாடு தமிழர்களால் அநுட்டிக்கப்பட்டதற்கு கொற்றவை என்று சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் செய்திகளே சான்றாகும்.

மனித வாழ்வுக்கு அதுவும் சுதந்திர வாழ்வுக்குத் தேவையான அஞ்சாமை, வீரம் ஆகிய சிறப்புக்களைத் தெய்வ அநுக்கிரகத்தாற் பெறவிரும்புபவர்கள் பூசிக்கவேண்டிய மூர்த்தியாகத் துர்க்காதேவி விளங்குகிறார். சக்கரம், சூலம் வாள்முதலிய ஆயுதங்களைதாங்கியிருப்பது துர்க்கா தேவியின் திருத்தோற்றச் சிறப்பாகும் பழமையான பெருந்தெய்வமாகக் கருதப்படும் துர்க்கா தேவியின் திருக்கரங்களில் உள்ள சில ஆயுதங்களைத் தாங்கித் துர்க்கா தேவியைப் போல பக்தர்களைத் தீமைகளினின்று காப்பாற்றியும் வீரதீரப்பண்புகளை வழங்கியும் அருள்புரிகின்ற மகாமாரி-முத்துமாரி-காளி-மாரியம்மன் -வீரமாகாளி முதலிய அம்பிகையரின் தோற்றங்களும் துர்க்காதேவியின் ஒவ்வோர் அம்சங்களாகவே கருதத்தக்கன.

1ம் சைவ வினாவிடையில் சக்தி என்றும், சொல்லுக்குப் பொருள்யாது? வல்லமை என்று கூறிய அடிப்படையில் பரம்பொருளாகிய சிவபெருமானின் சக்தியே ஒவ்வொரு தொழில் வேறுபாட்டால் ஒவ்வொரு உருவத்தைத் தாங்குகிறாள் என்பது நம்சைவசமயக் கோட்பாடாகும். இக்கோட்பாட்டின்படி சூரியன் சிவன் என்றால் அதன் கிரணங்கள் சக்தியாவாள். இதேபோல நெருப்பு சிவன் என்றால் அதன் சூடு சக்தியாவாள் நெருப்பின் சூடு வறுத்தல், பொசுக்குதல். வேகவைத்தல், பொன் முதலியவற்றை ஊளகச்செய்தல் பிரகாசமடையச் செய்தல் எனப் பல தொழில்களைச் செய்வது போல் சிவசக்தி உயிர்களின் பொருட்டு இங்குதல், துன்பம் துடைத்தல், வீரம். தீரம், கல்வி முதலியவற்றை வழங்குதல், நோய், அச்சம், அறியாமை, பாபம் முதலியவற்றைப் போக்குதல் என்னும் தொழில்களைச் செய்வாள் இப்படியான தொழில்களில் ஒன்றையோ சிலவற்றையோ செய்வதற்குத் தனித்தனி தோற்றங்களைக் கொள்வதுண்டு. துர்க்காதேவியின் தோற்றம் வீரதீரத்தை உதவி அச்சம் பகை என்பனவற்றிலிருந்து பாதுகாக்கும் தன்மை கொண்டதாகும்.

பொதுவாக மனித சமுதாயத்தில் விளங்கும் அறியாமை காரணமாகவும் பலம்-அதிகாரம் என்பன படைத்த சிலரின் சுயநலம் காரணமாகவும் பலருக்கு அச்சம் - கோழைத்தனம் என்பன ஏற்படுவதுண்டு. இப்படியான தன்மை காலத்துக்குக்காலம் வேறுவேறு கோணங்களில் ஏற்பட்டுவிடுவதனால் அச்சத்தைப்போக்கித் துணிவையும் கோழைத்தனத்தைப் போக்கி வீரத்தையும் பெற வணங்கப்படும் தெய்வமாகத் துர்க்காதேவிவிளங்குகின்றாள்.

வேதகாலமுனிவர்கள் முதல் சமீப காலப் பெரும் புலவர் பாரதியார்வரை காலத்துக்குக் காலம் துர்க்கையை வணங்கி அஞ்சாமை, வீரம் என்பன பெற்றவர்கள் பலர். இவர்கள் அன்றி பராசக்தியாகிய தேவியையே வழிபட்டு மேன்மையடைந்த ஆதிசங்கரர் முதல் அபிராமிப்பட்டர் வரை எண்ணப்படும் சக்தி உபாசகர்கள் எல்லாம் பராசக்தியின் வேறற்ற உருவமாகவே துர்க்கா தேவியினை வழிபட்டுள்ளார்கள்

இத்தகைய சக்தி உபாசகர்களையும் முனிசிரேட்டர்சள் புலவர்களையும் பின்பற்றிக் குற்றத்தைச் சுட்டிக்காட்டித் திருத்தும் துணிவையும் தீமை கொடுமை போன்றவற்றை எதிர்க்கும் வீரத்தையும் பெறத் துர்க்கை வழிபாட்டை மேற்கொள்வது இன்றைய நம் சமூகத்துக்கு அத்தியாவசியமாகும்

# வெலிக்கடை, பூஸா இளைஞர்களின் மரணம் தடுக்கப்படல் வேண்டும்

### மாத்தளை ஆ. இராஜலிங்கம்

வெலிக்கடைச் சிறையிலும், பூஸா முகாமிலும் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் சாவின்விளிம்பில் தத்தளித்துக் கொண்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன

நாட்டு விடுதலையில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில்தான் இவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டார்கள். எனினும் தற்பொழுது இவர்கள் சாகும்வரையிலான உண்ணாவிரதத்தினை மேற்கொண்டிருப்பது நாட்டின்விடுதலைக் குறித்தல்ல. மாறாக சிறைமுகாங்களில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமக்கு மறுக்கப்பட்டிருக்கும் மனித உரிமைகள் சம்பந்தமானதே இந்தப் போராட்டம்.

இதனை இவர்கள் பின்வரும் கோரிக்கைகள் மூலம் தெளிவுபடுத்தியுள்ளனர்.

(1) நிரபராதிகள் அனைவரும் விடுதலை செய்யப்படல் வேண்டும்.

(2) 18 மாதங்களுக்குமேல் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் விடுதலை செய்யப்படல் வேண்டும் அல்லது விசாரணை செய்யப்படல் வேண்டும்.

(3) சித்திரவதைகள், இழிவுச்செயல்கள் நிறுத்தப்படல் வேண்டும்.

(4) தம்மைப் பார்வையிட வரும் உறவினர்களிடமிருந்து வரும் மருந்துப் பொருட்கள் தமக்கு அனுமதிக்கப்படல் வேண்டும்.

(5) இந்தியபயிற்சி பெற்றதாக சந்தேகிக்கப்படுபவர்கள் சிறைச்சாலைக்கு மாற்றப்படல் வேண்டும்.

(இவர்கள் ஏனைய கைதிகளிடமிருந்து தனிமைப் படுத்தப்பட்டு உயிருக்கு உத்தரவாதம் இல்லாதநிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.)

இந்த உண்ணாவிரதிகளுக்கு ஆதரவாக யாழ். குடா நாடு முழுவதும் உண்ணாவிரதம்மேற்கொள்ளப்பட்டுவருவதுடன் மாணவர்களும், பொதுமக்களும் இணைந்தசகலமட்டத்திலுமான ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் இடம்பெறுகின்றன.

தமது கோரிக்கைகளை, முன்வைத்து தமது உடலைவருத்தி மரணிப்பதன் மூலம் சம்பந்தப்பட்டவர்களுக்கும், சர்வதேச அரங்கிற்கும் பிரச்னையை வெளிக்கொணரச் செய்வது தான் உண்ணாவிரதத்தின் அடிப்படை நோக்கம்.

இந்த உண்ணாவிரதப் போராட்டமானது கீழைத்தேய அரசியலில் புதிதான நிகழ்வொன்றல்ல இருப்பினும் மரணத்தை யாரால்தான் ஜீரணிக்கமுடியும். இருந்தாலும் அந்த மரணத்தோடு தமிழ் இளைஞர்கள் சிறைக்கூடங்களில் போராடிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த நாலாந்திகதிஆரம்பமான இந்தப்போராட்டம் இன்றுடன் ஒரு மாத பூர்த்தியினை அடைவது குறிப்பிடத்தக்கது

தம்மை எதிர்நோக்கி இருக்கும் மரணத்தைக் கண்டு சிறிதளவும் மனந்தளராத அந்த இளைஞர்கள் தாம் மரணிக்கும் பட்சத்தில் தமது சடலங்களை தமிழீழ மண்ணுக்கே அனுப்பிவைக்குமாறு கேட்டுள்ளனர்.

இந்திய சுதந்திரவீரர் பகவத் சிங் வெள்ளையர் ஆட்சியில் தமக்குத் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட பொழுது'' நாம் போராளிகள், எங்கள் தாய் நாட்டை மீட்பதற்காக சுதந்திர போர்க்களத்தில் குதித்த வீரர்கள், எனவே எபமை

(5ம் பக்கம் பார்க்க)

இன்று நவராத்திரி ஆரம்பம்

## சக்தியின் பெருமை

### கௌரீசதகம்

உலகனைத்து முளவாக்கி நிலைபெறுத்தி
யொடுக்கிவிளை யாடல்செய்வாள்
உலகிறந்த யோகியர்த முள்ளமதி லோவாது
நேட நின்றுள்
அலகிலிள ஞாயிறென்று யுதித்ததென
அவிர் சோதிப்பிழம்ப தாவாள்
இலகுவிழி கமலமலர் மானுமபமை
கௌரியையான் இறைஞ்சு கேனே.

பொருள்:- எல்லா உலகங்களையும் படைத்தும் காத்தும் அழித்தும் திருவிளையாடல் செய்பவளும், உலகப் பற்றுக்கள் அனைத்தையும் விட்ட யோகியர் தம் மனத்தில் நீள நினைந்து தேடுபவளும், எண்ணில்லாத உதயசூரியர்கள் ஒன்றுசேர்ந்து உதயஞ்செய்ததுபோல பிரகாசிக்கின்ற ஒளித் திரட்சியாக விளங்குபவளும், தாமரை மலர்போல விளங்கும் விழிகளை உடையவளுமாகிய கௌரி அம்மையை நான் போற்றித் துதிக்கின்றேன்.

தமிழில்: தி. சதாசிவஐயர்
பொருள்: மட்டுவில் ஆ. நடராசா

## விற்பனைக்கு

Morris Minor இரண்டு கதவுகள் EY Series 40 M P G, ரூ- 900, சிங்கர் ZIG-ZAG Electric தையல் மெஷின் ரூ-3000/ மாலை 3-6 மணி, ஸ்கந்தராசா, கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை. [C-4997]


## வெலிக்கடை

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

கோழைகளாக தூக்கிலிடாது. வீரனுக்குரிய அந்தஸ்துடன் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லுங்கள்'' என்று வெள்ளையரை நோக்கி வீர முழக்கம் செய்தார்.

இன்னும் வெள்ளையர்களுக்கு எதிராக போராடிய வீர பாண்டிய கட்ட பொம்மன் தமக்கு வெள்ளையரால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பொழுது ''சாகத் துணிந்தவனுக்கு தூக்கு மேடை ஒரு பஞ்சு மெத்தை'' என்று கூறி மரணத்தைத் தழுவினன்.

சிறைகளில் மடிந்து கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்களின் உறுதி மிக்க நிலைப்பாடும் எமக்கு இந்த வரலாற்று நிகழ்ச்சிகளையே ஞாபகமூட்டுகின்றன.

இவ்விளைஞர்கள் தமது கோரிக்கைகளை வென்றெடுக்க இவ்வாறான அஹிம்சை போராட்டத்திலன்றி வேறு எந்த மார்க்கத்தைத் தான் கையாளமுடியும்?

மனித உயிர்கள் அநியாயமான முறையில் அழிக்கப்படுவதை நாகரீகமடைந்துள்ள இந்த உலகில் வாழும் எந்த ஒரு மனிதனாலுமே ஜீரணிக்க முடியாது. இதற்கென மனித உரிமைச்சட்டமே அமைக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசும் இதனை ஏற்றுக்கொண்டுள்ளது.

இந் நிலையில் இன்றைய இந்த அரசு உயிருக்காக சிறைகளில் போராடிக் கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்களின் விடயத்தில எத்தனைத் தூரம் மனிதாபிமான, மனித உரிமை சட்டத்திற்கமைய நடவடிக்கையில் ஈடுபடும் என்பதே கேள்வி மேலும் இவ்விளைஞர்கள் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ்தான் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்களாயினும் இன்று அவர்கள் சிறையில் உணணாவிரதம் மேற்கொண்டுள்ளமை நாடு கேட்டல்ல. மாறாக ஒரு சிறைக்கைதிக்கு வழங்கப்பட வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட சில உரிமைகள் சம்மந்தமாகவே என்பது குறிப்பிடத்தக்கது.

புத்த தர்மத்தின் வெளிப்பாடுதான் தார்மீகம். சாதாரண மிருகப் பலியைக் கூட தடுத்து நிறுத்துவதற்கான சட்டமுண்டு இந்த தார்மீக ஆட்சியில் அந்த சட்டத்தை உருவாக்கிய இதே ஆட்சியில்தான் மிருகப் லிக்கான லைசென்சும் வழங்கப்படுகின்றது. சட்டம் வேறு நடைமுறை வேறு என்பதற்கொப்ப எழுதப்படாத சட்டங்கள் மூலம் மனிதப்படுகொலைகளும் நடத்தப்படுகின்றன.

எதுவானாலும் மரணத்தின் விளிம்பில் தத்தளித்துக் கொண்டிருக்கும் இச்சிறை இளைஞர்களின் நிலையை இன்றைய அரசு மனித உரிமைகள் சாசனத்திற்கமைய அணுக வேண்டும். அவர்களின் மரணம் தடுத்து நிறுத்தப்படல் வேண்டும். அவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படல்வேண்டும்.

இந்த விடயத்தில் இன்றைய நாகரீகமடைந்த உலகின் ஒவ்வொரு பிரஜையும் கவனம்செலுத்தவேண்டும்.

## மாமடுவாவில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டண இராணுவத்தினருள் ஒருவர் உயரதிகாரி ஆவர். நொறுங்கிய ஹெலியின் பாகங்களை இராணுவத்தினர் வாகனங்களில எடுத்துச் சென்றனர். இவர்களை நோக்கி ஈ. பி. ஆர். எல். எவ் போராளிகள் தன்னியக்க ரைபிள்கள், மோட்டார்கள் கொண்டு நடாத்திய பலமான எதிர் தாக்குதலை அடுத்து இவர்களும் அவ்விடத்திலிருந்து பின் வாங்கிச்சென்றனர். இச்சம்பவம் முதலாம் திகதி மதியம் இரண்டுமணியளவில் இடம் பெற்றது. இதன் போது எமது தரப்பில் எதுவித சேதமும் இல்லை'' என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (மா)

## ஆறும் மாத நினைவஞ்சலி



நடராஜா ஜெயக்குமார்

மலர்வு: 22-08-1963

உதிர்வு: 11-04-1986

திதி: 05-10-1986

எட்டாத தூரம்;
எம் கண்கள் ஈரம்;
சிட்டாகப் போனாய்-
சேனு என் ஆறய்?
முற்றாத பயணம்;
மூடாது நயனம்!
வற்றாத தாகம்!
மாளாத சோகம்!

ஐயா, அம்மா, சகோதர, சகோதரிகள்.

லோட்டஸ் றோட், ஆனைக்கோட்டை.

C 4995

## வவுனியா...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஆபத்தான நிலையில் வவுனியா ஆஸ்பத்திரியில் கொண்டுவந்து சேர்க்கப்பட்டார். பின்னர் இவர் அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

இச்சம்பவத்தையடுத்து வவனியாவிலுள்ள கடைகள் யாவும் இழுத்து மூடப்பட்டன. நகர் வெறிச்சோடிக் காணப்பட்டது. பாடசாலைகள் அனைத்தும் உடனடியாக மூடப்பட்டன.

இக்கண்ணி வெடிச் சம்பவத்தையடுத்து படையினர் வவனியா நகர் முழுவதிலும் தேடுதல் வேட்டையில் இறங்கினர். இத்தேடுதல் வேட்டையின்போது படையினர் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனரெனத் தெரிகிறது. இச்சம்பவத்தால் பீதியுற்ற மக்கள் அப்பகுதியிலிருந்து வெளியேறியுள்ளனரெனவும் தெரிவிக்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட சேதவிபரங்கள் எதுவும் தெரியவில்லை

மேலும் இக்கண்ணிவெடிச் சம்பவம் நடைபெற்ற இடமான வவனியா ஹொறவப் பொத்தானை வீதி முதலாம் கட்டைப் பாலம் முற்றாகச் சேதமடைந்துள்ளது. இதனால் வாகனப் போக்குவரத்துகள் இவ்வீதியில் ஸ்தம்பிதமடைந்துள்ளன. [கே]

## சாம்பல்தீவில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இத்துடன்ஹெலிகொப்டர்கள் மூலம் ராணுவத்தினர் இங்கு கொண்டு வரப்பட்டனர்.

மும்மார்க்கமாக வந்த இராணுவத்தினருடன் எமது வீரர்கள் காலை 11 மணிவரை பலத்த நேரடி மோதலில் ஈடுபட்டனர். இந்நேரடி மோதலின் போது ஸ்கவுட்கார் ஒன்றிற்கு 'றொக்கட் மூலம்தாக்கியதில் ஸ்கவுட்காரின் அருகில் காணப்பட்ட இராணுவத்தினர் பலர்கொல்லப்பட்டனர். ஸ்கவுட்காரும் சேதமானது.

இந்நேரடி மோதலின் போதும் பலராணுவத்தினர் கொல்லப்பட்டனர் இத்தாக்குதலின்போது 10 இராணுவத்தினர் அளவில் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதுடன் பெருந்தொகையானோர்பலத்த காயமடைந்தனர். இந்நேரடி மோதல்நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது3 ஹெலிகொப்டர்களும், 2 குண்டுவீச்சு விமானங்களும் பரவலான தாக்குதலை மேற்கொண்டன. இவற்றிற்கு எதிராகவும் எமது வீரர்கள் எதிர்த்தாக்குதல்களை மேற்கொண்டதில் ஹெலிகொப்டர்கள் பின்வாங்கின. கடற்படையினரின் பீரங்கிப் படகுகள்மூலம்வந்திறங்க முயன்ற ராணுவத்தினருடன் எமது வீரர்கள் நேரடி மோதலில் ஈடுபட்டதினால் ராணுவத்தினர் பின்வாங்கினர்.

நேற்று மாலை 5 மணிவரை குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதல்களை மேற்கொண்டன

இந்நேரம்வரையும் ராணுவத்தினருக்கு எதிராக ஆங்காங்கே எமது வீரர்கள் தாக்குதல்களை மேற்கொண்டவாறு உள்ளனர். நேற்றைய மோதலின் போது எமதுதரப்பில் வீரர் ஒருவர் காயமடைந்தார். இன்றும் பிற்பகல் அளவில் குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதல்களை மேற்கொண்டன.

## மொரவேவவில் கண்ணிவெடி

நேற்றுக்காலை 8-30 மணியளவில் மொரவேவ ராணுவ முகாமில் இருந்து 9 ராணுவத்தினருடன் கோவரசங்கடவை நோக்கி ரோந்து சென்று கொண்டிருந்த சமயம் மொரவேவ முகாமில்இருந்து முக்கால் மைல்தூரத்தில் ஜீப் வண்டிவந்தபொழுதுஎமதுவீரர்கள் தரைக்கண்ணிவெடியினை வெடிக்கச் செய்ததில் ஜீப் வண்டி சுக்கு நூறுகியது. அதில்வந்த 9 ராணுவத்தினரின் உடல்களும் சிதறிய நிலையில் காணப்பட்டது' [மா]

## அரசு அறிக்கை

கொழும்பு, வெள்ளி

திருகோணமலையில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த ராணுவம் மீது போராளிகள் மேற்கொண்ட தாக்குதலில் ராணுவம் ஒருவர் பலியானதுடன் இருவர் காயமடைந்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. (சி)

### உண்ணாவிரதம்

வல்வெட்டித்துறை, வெள்

பூஸா வெலிக்கடைச் சிறைச்சாலைகளில் சாகும் வரை உண்ணாவிரதமிருக்கும் தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு ஆதரவளித்து மடத்து வாசல் பிள்ளையார் கோவில் முன்றலில் பெருந் தொகையான மக்கள் சிறுவர் சிறுமியர் கலந்து கொண்டு ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர் (வா)


வெலிங்டன்

10-30, 2-30, 4-30, 6-30
பயங்கர சண்டை காட்சிகள் நிறைந்த
Space Hunter
(Adults only)
Sex-Action-Thrill

லிடோ

தினசரி காலை 10-30, மாலை 2-30, 6-30

பிரபு - நளினி நடித்த

புதிய வெளியீடு கள்

நியாயம்



## பிரயாண ஒழுங்குகள்

### டென்மார்க் – கனடா – ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்கு எங்கள் முகவர் கொழும்பில் இருந்து நேரே அழைத்துச் செல்வார்.

சிங்கப்பூர் — Housemaid; Railway Underground General Workers இவற்றுக்கான வருமான வாய்ப்புக்கள் உடன் செய்து கொடுக்கப்படும்.

சவூதி – Kuwait ஆகிய நாடுகளுக்கும் வருமான வாய்ப்புகள் செய்துகொடுக்கப்படும்.

GROUP ATLANTIC

(அடைக்கலமாதா கோவில் பின் பக்கம்)

163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(A - 1384)



## நியூ விக்ரேஸ்

### புதிய வீடியோ பட வெளியீடுகள்

1. உன்னை ஒன்று கேட்பேன் (தரமான பிரதி) மோகன், அமலா, செந்தில்.
2. இரவுப் பூக்கள் (V G P Master) சத்தியராஜ் ஜீவிதா
3. இரகசியம் (SUHAN MASTER) சந்திரசேகர், குயிலி, நளினி, கங்கா
4. அவள் ஒரு தமிழ்ச்சி (SUHAN MASTER) ரஜீவ், சரிதா
5. அவள் சுமங்கலிதான் (PYRAMID MASTER) கார்த்திக், இளவரசி, விசு
6. EAGLE WARRIERS.

நியூ விக்ரேஸ்

எலக்ரோனிக் கொம்பிளெக்ஸ்

தொலைபேசி: 23532

(A 1383)



## எமது நேற்றைய வெளியீடுகள்

1. இரவுப் பூக்கள் (V. G. P மாஸ்ரர்) ★ சத்தியராஜ் ★ நளினி
2. மெல்லத்திறந்தது கதவு (பிரமிட் மாஸ்ரர்) ★ மோகன் ★ ராதா
3. உன்னை ஒன்றுகேட்பேன் (கமெரா) ★ மோகன் ★ அமலா
4 என் சபதம் (V. G. P மாஸ்ரர்) ★ அர்ஜின் ★ அனிதா

குரு வீடியோ சென்ரர்,

180, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி:- 22779. (C 4994)


ஸ்ரீ வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வரர் தேவஸ்தானம்

வண்ணார்பண்ணை

## ★ நவராத்திரி விழா ★

வண்ணை நகர் ஸ்ரீவாலாம்பிகை அம்பாள் கொலு வீற்றிருந்து அடியார்கட்கு அருளும் நோக்குடன் 4-10-86 தொடக்கம் 11-10-86 வரை மாலை 4-00 மணிக்கு நவசக்தி அர்ச்சனை, விசேட ஹோமமும் நடைபெறவுள்ளது அடியார்கள் அன்னையின் அருள் பெற்றுய்ய வேண்டுகிறோம்.

## ★ கௌரி விரதம் ★

கௌரி விரதத்தை முன்னிட்டு 11-10-86 தொடக்கம் 21 நாட்கள் அன்னை வாலாம்பிகைக்கு காலை 9-00 மணிக்கு சகஸ்ரநாம குங்குமார்ச்சனை நடைபெற்று 21ம் நாள் கௌரி நூல் வழங்கப்படும் பங்குபற்றுவோர் தேவஸ்தானத்துடன் தொடர்பு கொள்ளும் படி வேண்டுகிறோம்.

[A 1435] தேவஸ்தானம்.

## கொழும்புத்துறையில்

# நூற்றாண்டு கடந்து ஒளிர்விடும் அற்புதவரத்தி, செபமாலை அன்னை

யாழ். நகரில், கொழும்புத் துறைப்பகுதியில் அமைந்துள்ள இத்தேவாலயம் செபமாலை அன்னையின் பெயரைத் தாங்கியுள்ளது. சரித்திரப் பிரசித்திபெற்ற இவ்வாலயம் ஒரு நூற்றாண்டை கடந்து புதுமை நிறைந்த தலமாகவும் விளங்குகின்றது. மரியாள் உலகில் தோன்றி இரண்டாயிரம் ஆண்டு நிறைந்துள்ளது அந்த அன்னை தேவனின் தாயாராக இருப்பதால் தேவமாதாவென்றும் உன்னத பட்டத்தை அடைந்துள்ளாள். உலகில் அவள் பாதம் தஞ்சமெனவந்தவர்களை ஒருபோதும் கைவிட்டது கிடையாதென்பது வரலாற்றுண்மை. செபமாலை ஒதிவரும்படி அந்த அன்னை பல நாடுகளில் சிறியோர் முதல் பெரியோர்வரை காட்சி கொடுத்துள்ளார். பிரான்ஸ் தேசத்தில் லூர்த் கெபியிலும் போர்த்துக்கல் நாட்டின் பாத்திமாபதியிலும் காட்சி கொடுத்தது சரித்திரவாயிலாக உலகம் அறிந்த உண்மை.

உலகில் சில நாடுகளில் பிற மதத்தவர்க்கும் கிறிஸ்தவர்களுக்கும் உக்கிரமான போர் நடந்துகொண்டிருக்கும் வேளையில் கிறிஸ்தவர்கள் தேவ மாதாவைப் பார்த்து இடைவிடாது ஜெபமாலை ஒதிவருவார்கள். அதே நேரத்தில் போர்நிறுத்தமுண்டாகி சமாதானம் நிலவியதும் நோக்கற்பாலது கிறிஸ்து பெருமான் உலகில் தோன்றி உலகிற்கு விட்டுச்சென்ற நற்போதனைகளை நிறைவேற்ற வந்த பாப்பாண்டவர்கள் செபமாலை அன்னைவழியாகச் சமாதானம் உலகில் எல்லா நாடுகளுக்கும் வளரவேண்டுமென வேண்டுதல் செய்துவருகின்றனர்.

பிரான்சில் லூர்த் அன்னையாகவும், போர்த்துக்கல் நாட்டில் பாத்திமா அன்னையாகவும், இத்தாலியில் லோரேத்து மாதாவாகவும், இந்தியாவில் வேளாங்கண்ணியில் அரோக்கிய அன்னையாகவும், இலங்கை நாட்டில் மன்னார்ப்பகுதியில் மருதமடு செபமாலை அன்னையாகவும் இன்னும் பல நாடுகளில் பல பட்டினங்களில் தேவதாயாருடைய பெயரால் பிரசித்திபெற்ற யாத்திரைத் தலங்களாகவும் விளங்கிவருகிறது.

செபமாலையை ஏந்திக் காட்சி கொடுத்தாள் செபமாலை மாதா என்னும் பெயரைத் தாங்கியுள்ளாள்.

### அருளானந்தம் -- பிலிப்

செபமாலை மாதாவின் பெயருடைய கோவில்கள் உலகில் எல்லா நாடுகளிலுமுண்டு. இலங்கையில் வடமாகாணத்தில் மடுவில் செபமாலை மாதாவாகவும், தீவுப்பகுதியில் சின்னமடு செபமாலை மாதாவாகவும் இரணைமடுவிலும், உடுவில் பகுதியிலும், யாழ். நகரில் கொழும்புத்துறைப்பகுதியிலும் செபமாலை மாதாவின் நாமத்தால் கோவில்களுண்டு.

செபமாலை அன்னையின் திருநாளை கொழும்புத்துறைப்பகுதியில் ஐப்பசி மாதம் வரும் முதலாவது ஞாயிற்றுக்கிழமை சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

# "வட இலங்கை மருத்துவக் கல்லூரிக்கு: அரசின் அங்கீகாரம் பெறும் விண்ணப்பம் கிடைத்துள்ளது'

## -டாக்டர் பிலிப்

யாழ்ப்பாணம், சனி

"வட இலங்கை மருத்துவக் கல்லூரிக்கு அரசின் அங்கீகாரம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் தற்போது கிடைத்துள்ளது இவ்வருடம் முடிவடைவதற்குள் இக் கல்லூரிக்கு அரசின் பூரண அங்கீகாரம் கிடைத்துவிடும்''

இவ்வாறு வட இலங்கை மருத்துவக் கல்லூரியின் காரியதரிசி டாக்டர் ஜே பி. ஸி பிலிப் மாணவர் - பெற்றோர் பொதுக்கூட்டத்தில் உறுதியளித்தார்.

மேற்படி கூட்டத்துக்கு தலைமைவகித்து டாக்டர் பிலிப் மேலும் கூறியதாவது:

வட இலங்கை மருத்துவ தொழிலாளர் கல்லூரியின் கீழ் கூட்டு இணைதல் சம்பந்தமாக விண்ணப்பம் கோரி இவ்வருடம் ஆரும்மாதம் 20ம் திகதி யாழ் மாவட்ட அமைச்சர் திரு யூ. பி. விஜயக்கோன் மூலம் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறுவதற்கு சமர்ப்பித்திருந்தோம். பாராளுமன்றத்திலும் அங்கீகாரம் கோரும் தனிநபர் பிரேரணையின் முதல்கட்ட வாசிப்பில் இவை நிறைவேறியுள்ளது.

இப்போதுதான் அங்கீகாரம் கோரும் விண்ணப்படிவங்களை பல்கலைக்கழக மானியக் கமிஷன் எமக்குத் தந்துள்ளது.

இப்படிவத்தில் முக்கியமாகக் கோரப்படும் பலகேள்விகளை தவிர்க்குமுகமாகவே நாம் முன்கூட்டியே பல ஏற்பாடுகளை செய்துள்ளோம்.

இக் கல்லூரியை நடாத்துவதற்கு வேண்டிய பணம். மாணவர் எண்ணிக்கை, விரிவுரை மண்டபங்கள், ஆய்வுகூடங்கள், அறிவும் - அனுபவமும் வாய்ந்த விரிவுரையாளர்கள், விரிவுரையாளருக்கும் மாணவர்களுக்கும் வேண்டிய வசதிகள், சகல அம்சங்களும் ஒருங்கமைந்த வாசிகசாலை, நோயாளர்களைப் பற்றி ஆய்வுகளை நடாத்துவதற்கு வேண்டிய ஆஸ்பத்திரிகள் இவைகளே படிவத்தின் முக்கிய கேள்விகள். இவைகளை நாம் முன்கூட்டியே சிறப்பாகச் செய்து முடித்துவிட்டோம். ஆகவே இனிமேல் எமக்கு யாழ் பல்கலைக்கழக மருத்துவப் பீடத்தின் அங்கீகாரம் கிடைப்பதில் எதுவித தாமதமும் ஏற்படாது''

[வி]

### ஆப்கானி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சொல்வார்கள் என்ற விபரத்தை அவர் தெரிவிக்கவில்லை.

ஆப்கானிஸ்தான் பாகிஸ்தான், சோவியத்யூனியன் ஆகியவற்றுக்கிடையே விரைவான அரசியல் பேச்சுக்கள் அவசியமென்றும் அவர் வலியுறுத்திக்கூறினார்.

### பிரேஸில்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சுரங்கம் அமைந்துள்ளது.

பலத்த மழை காரணமாக இச்சுரங்கத்தின் மண்சுவர் ஒன்று இடிந்து வீழ்ந்ததாலேயே இவ்விபத்து நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சுரங்கத்தின் பாதுகாப்பு பிறைகள் புனரமைக்கப்பட்டு ஒருசில வாரத்துக்கு முன்னரே இது மீண்டும் இயங்கத் தொடங்கியது என தெரிவிக்கப்பட்டது.

# இன்றைய பலன்

மாதம்: புரட்டாதி
திகதி: 18 (4-10-86)
கிழமை; சனிக்கிழமை
திதி: பிரதமை பி இ வரை
நக்ஷத்திரம்; அத்தம் பி.ப வரை

மேடம்: முன்னேற்றம்தடைப்படும். பணவரவில் மந்தநிலை காணப்படும். முகமன் பேசுவோர் விடயத்தில் அவதானம் வேண்டும். அடக்கம் நன்று.

இடபம்: தெய்வ நம்பிக்கை மேலோங்கும். புண்ணியஸ்தல யாத்திரையொன்றும் மேற்கொள்ளப்படலாம். இல்லத்திலும் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும்.

மிதுனம்: பயணம் இன்று தொடரும் குடும்பத்திலும் குதூகல நிகழ்ச்சிகள் இடம்பெறும். அன்னியர் உதவியுமுண்டு.

கடகம்: விருந்தினர் வருகை உற்சாகமளிக்கும். பூமியால் இலாபம் கிட்டும் அறவழியிலும் நாட்டம் பிறக்கும்.

சிங்கம்: அன்னியர் சகவாசம் உங்களை சிக்கலில் மாட்டிவைக்கும் எதிரிகளின் சூழ்ச்சிகள் மனநிம்மதியைக்குறைக்கும் அவசரப்போக்கை தவிர்க்கவும்

கன்னி: மனப் போராட்டம் அதிகரிக்கும் கடன் தொல்லையிம குடும்பத்தில் கைகலப்பும் தோன்றும் வீண்பழிக்கும் இலக்காகுவீர்கள்.

துலாம்: பிரிந்தவர்கள் வாழ்க்கையில் இணைவர். சுற்றுடலிலும் மதிப்புயரும். கடமையிலும் கண்ணியமான நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம்.

விருச்சிகம்: வாய்வுக்கோளாறினல் வேதனைப்படுவீர்கள். கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருக்கவும். சிந்தனைக் கிடமளியாதிருக்கவும்.

தனுசு: நீண்டநாள் பூமிப் பிணக்கு இன்று நிவர்த்தியாகும். எதிர்பார்த்த சுபகாரியம் ஒன்று நிறைவுபெறலாம். இனசனம் கூடுவர்.

மகரம்: இனசன மகிழ்ச்சியுண்டு. வட்டிக்கடை வைத்திருப்போருக்கு அது மேலும் குட்டிபோடும். புத்திரசுகமுமுண்டு.

கும்பம்: குமுறும் நெஞ்சத்துடன் நாளைக்கடத்துவீர்கள். தனிவழிப்பயணத்தைத்தவிர்க்கவும். நண்பர்களும் காலைவாரிவிடக்கூடும்.

மீனம்: இதமான வாழ்வு இன்சொல் இவற்றுடன் பெரியோர் ஆதரவுமுண்டு. மகிழ்ச்சிகரமான தினம்.

திருமலை
க. வே. ரவீந்திரன்

யாழ்ப்பாணம்
ஐக்கிய வியாபாரச் சங்கம்
புதியதோர் சேவை
பொருட்கள் வீட்டு வாயலில் விநியோகிக்கப்படும்.
(HOME DELIVERY SERVICE)
(யாழ் மாநகரசபை எல்லைக்குள்)
தங்களுக்குத் தேவைப்படும் பொருட்கள் யாவும் தங்கள் வீட்டு வாயலில் கொண்டுவந்துதர ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
இச்சேவை பின்வரும் கிளைகளில் நடைமுறையிலிருக்கும்:
இல. 150 (344), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
,, 568, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
,, 421, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
விபரங்களுக்கு கிளை முகாமையாளர்களுடன் தொடர்பு கொள்ளவும்.
420 (530), ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(A 1380)

பிரயாண ஒழுங்குகள்
★ லிபியா: ஓயில் கொம்பனி வேக்கேஸ்
★ குவைத்: ஆஸ்பத்திரி கிளீனேஸ்-ஆண், மெயின்ரனன்ஸ் கிளீனேஸ், ஆஸ்பத்திரி பெண் கிளீனேஸ், கவுஸ் மெயிட்ஸ், 100 கிலோ அரிசி மூட்டை தூக்கக்கூடிய லேபறேஸ், றெயிலர் றைவேஸ், போக்லிப்ற் றைவேஸ்,
★ துபாய்: எக்கவுண்டன்ஸ், றைவேஸ்/ஓரோமெக்கானிக், சேல்ஸ்மென், ஸ்ரெனோகிருபர், ஸ்ரோர் கீப்பேஸ். மெக்கானிக்ஸ், சிவில்இஞ்ஜினியேஸ். சேவியேஸ், ஹெவி and லைற்வெயிக்கிள் றைவேஸ், காப்பென்ரேஸ், மேசன், குக், சீப் குக்.
★ நோத் யேமன்: அக்கிரிகல்சர் லேபறேஸ்.
★ சவுதி அரேபியா: ஹெவி வெயிக்கிள் பஸ் றைவேஸ்.
★ சவுதி அரேபியா: ஸ்கூல் கிளீனேஸ்.
மேற்குறிப்பிட்ட இடங்கட்கு வருமான ஒழுங்குகள் பெற விரும்புவோர் உடனடியாக சகல ஆவணங்களுடன் எங்களிடம் நேரில் வரவும்.
டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்
பிரசாந்தி வைத்திய நிலையம்,
கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு, உடுவில்.
பி. கு. இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள ஒழுங்கையால் வரவும். [A 1377]

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

பிரயாண ஒழுங்குகள்
★ கனடா ★ டென்மார்க்
★ ஜேர்மனி ★ சவூதி
கனடா, டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் சென்ற வார பயணங்களை வெற்றிகரமாக நடாத்தி முடித்து உள்ளார். இதுவரை எமது பல பயணங்கள் விரைவாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.
ஜேர்மனிக்கு செல்லவிரும்பும் ஆண்கள், பெண்கள் உங்களை எமது பிரயாண முகவர் நேரடியாக அழைத்துச்செல்வார்.
சவூதி அரேபியாவிற்கு வீதி அமைப்பு வேலைக்கு பிரயாண ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். விரைவாக அனுப்பிவைக்கப்படுவார்கள். உடன் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும், சென்ற மாதம் சவூதிக்கு எம்மிடம் பாஸ்போட் தந்தவர்கள் இம்மாதம் 18-ம் திகதி சவூதி சென்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.
தொடர்பு:-
N. பாலா
பஸ் இல. 764. திருச்செல்வம் வீதி,
பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில் கிழக்கு. கோண்டாவில்.
★ உங்கள் நன்மை கருதி தீவுப்பகுதியில் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் என்னும் பெயரில் வங்களா வடிச் சந்தியில் அமைந்துள்ளது.
★ ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் குப்பிளான் சந்திக்கு அருகாமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
[A-1855]

## பொறியியலாளர் கொலை

# ஜேர்மன் ஒலிபரப்பு நிலைய திருமலைநிலையம்மூடப்படுமா?

## முடிவெடுப்பதில் திண்டாட்டம்

கொழும்பு, வெள்ளி: மேற்கு ஜெர்மன் ஒலிபரப்பு நிலையமான 'டொய்ச் வெல்ஸ்' தனது திருமலை அஞ்சல் நிலையத்தை மூடிவிடுவதா இல்லையா என்பதை முடிவுசெய்ய முடியாமல் திண்டாடுவதாக தெரியவருகிறது.

இதே நிலையத்தைச் சேர்ந்த ஜெர்மனிய பொறியியலாளர் ஒருவர் அண்மையில் விமானக் குண்டுவீச்சுக்குப் பலியானது தெரிந்ததே. இதனையடுத்து இந்நிலையத்தில் கடமையாற்றிய பல ஜேர்மனியர்கள் உடனடியாக தாய்நாடு திரும்ப வேண்டுமெனகோரிக்கைவிடுத்துள்ளனராம். ஆயினும் சில ஊழியர்கள் இச்சேவைதொடர வேண்டுமென்று விரும்புகின்றனர்.

இதனிடையே 'டொய்ச் வெல்லெ'யின் இயக்குநர் நாயகம் கடந்தவார இறுதியில் திருமலைக்கு விஜயம்செய்து சம்பந்தப்பட்ட பொறியியலாளர் எவ்வாறு இறந்தார் என்பதை நிலையஊழியர்களிடமும் அரச அதிகாரிகளிடமும் கேட்டறிந்தார். நேற்றிரவு இவர் ஜெர்மன் பயணமானார். (ஊ)

# செயற்கை கால் பெற்ற முதலாவது இளைஞர்

யாழ்ப்பாணம், சனி. யாழ்மாவட்டத்தில் முதலாவது 'செயற்கை கால்' ஒன்றை மாதகலைச்சேர்ந்த இளைஞர் ஒருவர் பெற்றுள்ளார்

''நோரூட்'' ஸ்தாபனம் இதற்கான நிதியைக்கொடுத்து உதவியுள்ளது. 'பிறன்விங் சொசையிற்றி'' செயற்கை காலை கால் இல்லாதவர்களுக்கு வழங்கி வருகிறது

மாதகலைச்சேர்ந்த பெண்ஒருவரின் முயற்சி காரணமாக பி. பரமகுமார் (வயது 19) என்ற இந்த இளைஞர் செயற்கை காலைப்பெற்றுள்ளார்.

1980ம் ஆண்டு மாமரத்திலேறி வீழ்ந்ததன் காரணமாக ஏற்பட்டிருந்த காயங்களால் இவரது கால் ஒன்றை அகற்ற நேரிட்டது.

பரமகுமார் கொழும்பு சென்று மேற்படி 'சொசையிற்றியில்' செயற்கைக்காலைப் பொருத்தி அவர்களிடம் இக்காலைக்கொண்டு நடக்கும் பயிற்சியையும் பெற்றுக் கொண்டு அண்மையில் யாழ்ப்பாணம் திரும்பினர். (ச)

## வைபவம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி) 12ம். 18ம், 19ம், 25ம், 26ம் திகதிகளில், புதிய மத்தியஸ்தர்களுக்கான கருத்தரங்கு வகுப்புகளை நடாத்தவிருப்பதாகவும் இவ்வகுப்புக்களில் வயதுக்கட்டுப்பாடின்றி யாவரும் கலந்துகொள்ளாமெனவும் மேற்படி சங்கத்தின் தலைவர் திரு வி. கே. ஆறுமுகம் தெரிவித்தார். (வி)

# துப்பாக்கி ரவைகள் துளைத்தன

பூநகரி வெள்ளி

பூநகரி வாடியடியிலுள்ள ப. நோ. கூ. சங்கத்தின் பிடவை விற்பனை நிலையத்தின் முன்புற கதவுகளைத் துப்பாக்கி ரவைகள் துளைத்து உள்ளேயிருந்தகண்ணாடி அலுமாரிகளை தகர்த்துள்ளன ஆயினும் பிடவைகள் அப்படியே இருந்தன.

# பாரதியார் நினைவு விழா

யாழ்ப்பாணம், சனி.

''தமிழ்பேசு மக்கள் இன்று பாரதியார் வழிநின்று அவர் காட்டிய விடுதலை உணர்வுடன் எமது விடுதலைக்காக செயல் படவேண்டும்''.

இருபாலை சி. சி. எம். பாடசாலையில் நடைபெற்ற மகாகவி பாரதியார் நினைவு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசிய திரு. செ. சபாரத்தினம் கூறினர்.

இருபாலை கிழக்கு பாரதி கலாமன்றமும், மாதர் அணியும் இணைந்து நடத்திய இவ் விழாவிற்கு கவிஞர் க முருகையன் சிறப்புரை நிகழ்த்தினர். திரு க. தணிகாசலமும் உரை நிகழ்த்தினர்.

கோவையூர் கவிஞர் பூமகள் தலைமையில் கவியரங்கும், கலா மன்ற இளைஞர்களால் கவிதா நிகழ்வு நிகழ்ச்சியும் மாதர் அணியால் ஒழுங்குசெய்யப்பட்ட மாணவர்களின் பேச்சு, இசை, நடன நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (வா)

# உண்ணாவிரதத்தின்போது படையினர் திடீர் வருகை

நயினாதீவு வெள்ளி

வெலிக்கடை, பூஸா உண்ணாவிரதிகளுக்கு ஆதரவாக நயினாதீவு அருள்மிகு பிடாரி அம்பாள் ஆலய முன்றலில் கடந்த 1ம் திகதி உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது. நூறுக்கு மேற்பட்டோர் இவ் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர்.

இவ் உண்ணாவிரதம் முடிவுறுவதற்கு அரை மணித்தியாலயத்துக்கு முன்பாக சுமார் பதினைந்துக்கும் மேற்பட்ட படையினர் திடீரென வந்து உண்ணாவிரதிகளை சுற்றிவளைத்து விட்டனர். இவர்கள் வரப்போகிறார்கள் என்று தெரிந்ததும் உண்ணாவிரமிருந்தோர் ஒருவரும் அவ்விடத்தை விட்டு நகராது பஜனைபாடத் தொடங்கிவிட்டார்கள். படையினரும் அங்கு நின்ற பெரியோர்களிடம் இது சம்பந்தமாகவிசாரித்தபோது அவர்கள் இன்று இறைவனை வேண்டி உபவாசம் இருக்கும் தினம் என்று கூறியதை அடுத்து படையினர் அவ்விடத்தை விட்டு தமது முகாம் சென்றனர்.

## உண்ணாவிரதம்

பண்டத்தரிப்பு வியாழன்

வெலிக்கடை, பூஸா தடுப்பு முகாம்களில் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து அளவெட்டி வடக்குதவளகிரி முத்துமாரி அம்மன் ஆலய முன்றலில் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

உண்ணாவிரதத்தில பெருந்தொகையான பெண்கள் உட்பட சுமார் 500 பேர்சுலோக அட்டைகளை தாங்கியவண்ணம் உண்ணாவிரதம் இருந்தனர். அளவெட்டி வடக்கு சனசமூக நிலையம், மாதர் முன்னேற்றச் சங்கம்ஆகியவற்றினல் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. [வா]

0 0 0

பளை, வெள்ளி

சாவகச்சேரி நீதிமன்ற வளவில் நடைபெற்ற உண்ணாவிரதத்தில பெருந்தொகையான மக்கள்கலந்துகொண்டனர்

உண்ணாவிரதமுடிவில் கிராமிய தொழிலாளர் பிரதிநிதி ப. கிருஸ்ண பிள்ளை, சிவல் தொழிலளர் நலன்புரி ஒன்றிய பிரதிநிதி எஸ் நல்லையா வடபிரதேச தொழிலாளர் சங்க பிரதிநிதி அ குலசேகரம் மற்றும் சிறைமீண்ட இளைஞர்கள் ஆகியோரும் உரைநிகழ்த்தினர். [வா]

## சிறைக்கைதிகள் உண்ணாவிரதம்

# 'அரசின் அடக்குமுறையே இன்றைய நிலைக்கு காரணம்'

வல்வெட்டித்துறை. வெள்ளி

அன்றைய அஹிம்சைப் போராட்டம் தோல்வியடைந்ததற்கும், இன்றைய ஆயுதப் போராட்டம் ஓரளவு வெற்றியடைந்த போதிலும் பூரணத்துவத்தை இன்றுவரை அடையாததற்கும் ஒரே காரணம் மக்கள் சக்தியை முழு மூச்சுடன் பிரயோகப் படுத்தாதே.

வெலிக்கடை, பூஸா முகாம்களில் சாகும் வரை உண்ணாவிரதமிருந்து வரும் தமிழ இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து ஒழுங்கு செய்யப்பட்ட அடையாள உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய கொற்றையூர் கிருஷ்ணனந்தன் கூறினர்.

திரு. விந்தன் பேசுகையில், இன்றைய உண்மையான போராட்டத்தின் முக்கிய உணர்வாக எமது விடுதலையே முன்வைக்கப்பட்டுள்ளது. விடுதலை உணர்வு காரணமாகவே எமது இளைஞர்கள் வெலிக்கடைச் சிறையில் அடித்துக் கொல்லப்பட்டும், சித்திரவதைகளுக்குள்ளாக்கப்பட்டும், பூஸா முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்று கூறினர்.

திரு. தாஸ் உரையாற்றுகையில் ஆயுதங்களை விட மக்கள் சக்தியே விடுதலைக்கு வழிகோலும் பலத்த ஆயுதமாகும். சித்திரவதைக் கூடங்களில் உண்ணாவிரதம் இருக்கும் இளைஞர்களுக்கு உற்சாக மூட்ட, மக்களின் உணர்வுகளைக்காட்ட பரந்த அளவிலான போராட்டங்களும் பத்திரிகை விமர்சனங்களுமே சிறந்த சாதனமாக அமையும். என கூறினர்.

திரு. கே பி. நாதன் உரையாற்றுகையில், இதனை வெறும் போராட்டமாகக் கொள்ளாமல், மக்களின் ஆதாவும், உள்ளக் கிளர்ச்சிகளும் கொண்ட விடுதலைப் போராட்டமாகக் கொள்ள வேண்டும் இன்று சித்திரவதை நாளை படுகொலையாக மாறலாம். கடந்த கால நிகழ்வுகளைப் போன்று முடிந்தயின் முரசொலிக்காயல் இன்றைய விடிவுக்காக போரொலி கிளம்ப வேண்டும்''.

உண்ணாவிரதத்தை முடித்து வைத்து திரு. ஞானசீலன நன்றி கூறினர். (வா)

உடுவில், வெள்ளி

''வெலிக்கடை, பூஸா முகாம்கள் இன்று வதை முகாம்களாக மாறியுள்ளன. மனிதனின் அடிப்படை தேவைகள் கூட அங்கு சரியாக கிடைக்கவில்லை, எமது நாட்டுக்காக' இன விடுதலைக்காக சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் கைதிகளுக்காக அவர்களின் போராட்ட வெற்றிக்காகவும் பிரார்த்தனை செய்வது தமிழ் மக்களது கடமையாகும்.''

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் நடைபெற்ற சிறைக் கைதிகள் பிரார்த்தனை கூட்டத்தில் பேசிய அதிபர்திரு வியோகீஸ்வரன் இவ்வாறு கூறினர்.

முருகமூர்த்தி வித்தியாசாலை அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள் சிறைக் கைதிகளின் விடுதலைக்காக சோளறு பதிகம் உட்பட பல தேவார, திருவாசகங்களை ஓதி பிரார்த்தனை செய்தனர் கிறிஸ்தவ மாணவர்கள் கிறிஸ்தவ மத ஆசிரியர்கள் தலைமையில் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். (வா)


## பிரயாண ஒழுங்குகள்

★ லிபியா: (ஒயில் கொம்பனி வேக்கேஸ்)
★ குவைத்: (ஆஸ்பத்திரி பெண் கிளீனேர்ஸ்)
★ குவைத்: (ஆஸ்பத்திரி ஆண் கிளீனேர்ஸ்)
★ குவைத்: (மெயின்ரனன்ஸ் கிளீனேர்ஸ்)
★ குவைத்: (100 கிலோ அரிசி மூட்டை தூக்கக் கூடிய லேபறேஸ்)
★ குவைத்: (றெயிலர் றைவேஸ் போக் லிப்ற் றைவேஸ்)
★ துபாய்: (எக்கவுண்டன்ஸ், றைவேஸ்/ ஓரோமெக்கானிக், சேல்ஸ்மென், ஸ்ரெனோ கிருபர், ஸ்ரோர் கீப்பேஸ். மெக்கானிக்ஸ், சிவில் இஞ்ஜினியேஸ், சேவியேஸ், ஹெவி அன் லைற் வெயிக்கிள் றைவேஸ், காப் பென்ரேஸ், மேசன். குக் அன் சீப்குக்
★ நோத்யெமன்: (அக்கிரிகல்சர் லேபறேஸ்
★ சவுதி அரேபியா: (ஹெவி வெயிக்கிள் பஸ் றைவேஸ்)
★ சவுதி அரேபியா: (ஸ்கூல் கிளீனேர்ஸ்)

இவ்விடங்களுக்கு வருமான ஒழுங்குகள்பெற விரும்புவோர் சகல ஆவணங்களுடனும் நேரில் வரவும்;

பாஸ்போட், பொண்ட், ரிக்கற்றிங் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

யூனிவேசல் ஏஜென்சி

125, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.
பி கு.
(பெற்றோலியம் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாக, ஆயுர்வேத கல்லூரி அருகாமையில்)

(A 1376)



## சுதர்சா மின்தறி நிலையம்

புதிய நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிலையத்திற்கு கீழ்காணும் வேலைகளில் அனுபவமுடையவர்கள் உடன் நேரில் தொடர்புகொள்ளவும்.

(1) நெசவு செய்வோர்
(2) நூல் கோர்வை செய்வோர்
(3) பா தயாரிப்போர்

தங்குமிடவசதி செய்து கொடுக்கப்படும்.

சுதர்சா மின்தறி நிலையம்
பிள்ளையார் கோயில் வீதி,
தாவடிச்சந்தி.

(C 4975)



JUST HOP IN ONCE
YOU WON'T FORGET THE TASTE

RSR GREEN PEKING PALACE

★ மிகவும் பாதுகாப்பான இடம்
★ அன்பான உபசரிப்பு
★ நவீன பாணியில் நாவுக்கினிய உணவு வகைகள்
★ அதி குறைந்த விலையில்,

CHINESE MEALS,
SHORT EATS,
ICE-CREAMS

Also,
ORDERS UNDERTAKEN
Chicken buriyani Rs. 25/-.
Lunch, Short Eats Cool Drinks, Cakes, Ice-creams.

for,
WEDDING RECEPTION
BIRTHDAY PARTIES
COCKTAIL PARTIES

AND
BUFFET DINNER
ON EVERY SUNDAYS
Rs. 37-00/- only.

69G, 4-th CROSS STREET, JAFFNA.

[A-1382]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

சனிக்கிழமை 4-10-86

## கொலை முயற்சி நபர் இனம் காணபபட்டார்

புதுடில்லி, அக். 3

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியை நேற்று படுகொலை செய்ய முயற்சித்த நபர் பஞ்சாப்பைச் சேர்ந்த கமஜிக்சிங் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மேற்படி நபர் பயங்கரவாதச் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்

இதேவேளை இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தியை கொலைசெய்ய எடுத்த முயற்சி குறித்து அமெரிக்க ஜனாதிபதி திரு றொனல்ட் றீகன் தமது ஆழ்ந்த அதிர்ச்சியை வெளியிட்டுள்ளார் (எ)

# தனியார் வாகனக்கடத்தல், கொள்ளை: 'தமிழீழ இராணுவம்' கண்டனம்

யாழ்ப்பாணம் சனி

"தமிழீழ விடுதலைப் போராட்ட ஆரம்பகாலகட்டத்தில் விடுதலைக்கான அத்தியாவசிய தேவைகளுக்காக கொள்ளைகள் மக்களின் ஒத்துழைப்பு இன்மையாலும் போராட்ட வளர்ச்சிகளுக்காகவும் ஆயுதமுனையில் நடத்தப்பட்டது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆயினும் இன்றைய காலகட்டத்தில் மக்களோடு மக்களாக விடுதலை இயக்கங்கள் மாறிவிட்டபொழுதினில் இன்னமும் தமிழீழ எல்லைப்பிரதேசங்களில் நிகழ்கின்ற தனியார் வர்த்தக ஸ்தாபன கொள்ளைகள் லொறிக்கடத்தல்களை வன்மையாகக் கண்டிக்கிறோம் எதிர்க்கிறோம்"

இவ்வாறு தமிழீழ விடுதலை ராணுவம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

"இன்று தமிழீழ எல்லைப் பிரதேசங்களில் பரந்துவாழும் எம்மவர் தம்மால் முடிந்த பங்கினைவிடுதலைக்கானபோராட்டத்திற்கு செலுத்தி வருகின்றனர். இதுவிடுதலையின் அவசியம் பற்றிய அவர்களது சிந்தனையையும் அடக்கு முறைக்கெதிராக கிளர்ந்தெழுகின்ற உணர்ச்சியினையும் தமிழீழ மக்களின் எழுச்சியினையும் பலத்தினையும் காட்டுகின்றது.

"இந்த நிலைமையில் தொடர்ந்துவரும் கொள்ளைகள் லொறிக்கடத்தல்கள் சம்பந்தப்பட்டவர்களை மட்டுமல்லாமல் எல்லோர் மனதிலும் மனவேதனையையும் அதிருப்தியையும் உண்டாக்கியது ஆச்சரியமில்லை. அவை வெகுஜன கிளர்ச்சியாக உருவெடுத்து யாழ். வர்த்தகர்சங்கம் இஸ்லாமிய போக்குவரத்து ஒன்றியம் வடபிராந்திய போக்குவரத்துச்சங்கம் ஆகிய அமைப்புக்களின் கீழ் முழுமையான ஹர்த்தால் பூரண கடையடைப்பு என்பதனை அனுஷ்டிப்பதன் மூலம் தமது எதிர்ப்பினை தெரிவிக்கின்றனர்.

அத்துடன் அரசாங்கத்தினரின் சிவில் நிர்வாகம் சீர்குலைந்த நிலையில் விடுதலை இயக்கங்களின் பூரண கட்டுப்பாட்டுக்குள்ளிருக்கும் தமிழீழ எல்லைப் பிரதேசங்களுக்குள் இந்த வகையான அசம்பாவிதங்களை ஆயுதபாணிகளாக நடமாடும் இவ்வாறான கொள்ளையர் கூட்டங்களை அக்கறையுள்ள எந்தவொரு விடுதலை இயக்கங்களும் கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது என்று அறிக்கைகள் துண்டுப்பிரசுரங்கள் சுவரொட்டிகள் மூலம் வர்கள் எழுப்பியிருக்கின்ற வினவை அலட்சியப்படுத்துவதற்கில்லை.

"போராட்டத்தை மழுங்கடிக்கும் இத்தகைய தீய சக்திகளை இனங்கண்டு கொள்ள உதவுமாறு சகலரையும் கேட்டுக்கொள்கிறோம்" (மா)

## கடத்தப்பட்ட தோழர்களை உடன் விடுதலைசெய்யவும்

யாழ்ப்பாணம், சனி

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அங்கத்தவர்களான ரமேஸ், நகுலன் ஆகியோர் கடந்த புதன்கிழமை இனந்தெரியாத ஆயுதபாணிகளால் கடத்திச் செல்லப்பட்டது தொடர்பாக ஜனசக்தி சனசமூக நிலையம், விளையாட்டுக்கழகம் கண்டன அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

கடந்த புதன்கிழமை இரவு இனந்தெரியாத ஆயுதம் தாங்கிய இளைஞர்களினால் கடத்தப்பட்ட ஈ. பி. ஆர். எல். எவ் தோழர்கள் ரமேஸ் (நல்லூர்), நகுலன் (கோப்பாய்) ஆகிய இருவரையும் கடத்தியதால் நாம் மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். மேலும் இத்தகைய செயலைக் கண்டிக்கின்றோம். குறிப்பிட்ட இரண்டு தோழர்களையும் உடனடியாக மக்கள் மத்தியில் விடுதலை செய்யுமாறு வேண்டுவதோடு அவர்கள் மீதான விசாரணைகள் ஏதும் இருப்பின் மக்கள் மத்தியில் வைத்து விசாரிக்கும் படியும் நாம் வேண்டுகின்றோம்.

மேலும் இத்தகைய தேழர்கள் கடத்தப்பட்ட இத் தவறான சம்பவத்தை கண்டிக்குமாறு நாம் அனைத்து ஜனநாயக சக்திகளிடமும் கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் தோழர்கள் கடத்தப்பட்டது சம்பந்தமான தகவல்களை உடன் எமக்கு தந்துதவுமாறு கடத்தலோடு சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம். (கே)

## ரமேஸ் கடத்தலை கண்டித்து ஊர்வலம்

யாழ்ப்பாணம், சனி

அண்மையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த தோழர் ரமேஸ் கடத்தப்பட்டதைக் ஏனைய அராஜக நடவடிக்கைகளைக் கண்டிக்கும் முகமாகவும் மானிப்பாயில் நேற்று வெள்ளிக்கிழமை ஓர் ஊர்வலம் நடாத்தப்பட்டது.

மாணவர்களின் தன்னெளுச்சியான இவ் ஊர்வலம் எல்லாப் பாடசாலைகளையும் இணைத்து எல்லா தேசிய மன்றத்தின் மானிப்பாய் பிராந்தியக் குழுவால் ஒழுங்கு செய்யப்பட்டது

"ரமேசை விடுதலைசெய்" "அன்று சந்ததியார் நேற்று ஞானம் இன்று ரமேஸ்" போன்ற கோஷங்கள் கோசிக்கப்பட்டன.

இவ்வூர்வலத்தை தேசிய மாணவர் மன்றத்தின் அமைப்பாளர்குழு கொள்கை ரீதியாக அங்கீகரிக்கின்றது.

### வல்வை; தொண்டமானாறு இராணுவமுகாம் பலப்படுத்தல்:

## ஹெலிமூலம் படையினர் விரைவு; மொஸாட் பிரிவினரும் உள்ளனராம்

வல்வெட்டித்துறை, வெள்ளி

வல்வெட்டித்துறை இராணுவ முகாமில் நேற்றைய தினம் மாலையும் இன்று அதிகாலையிலும் பல தடவைகள் ஹெலி கொப்டர்கள் வந்து இறங்கிச் சென்றன.

நேற்றைய தினம் மாலையில் வந்திறங்கிய ஹெலிகொப்டர்களிலிருந்து படைவீரர்கள் பலர் இறக்கிவிடப்பட்டதாகவும் அதில் மொசாட்படைப் பிரிவைச் சேர்ந்தவர்களும் இறக்கபபட்டதாகத் தகவல்கள் மூலம் தெரியவருகிறது:

இராணுவமுகாமை அண்டிய பகுதிகளிலுள்ள பல வீடுகள் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டும், முகாம் எல்லைகள் விஸ்தரிக்கப்படுவதையும், முகாமைச் சுற்றியுள்ள தகர்க்கப்பட்ட வீடுகளில் இராணுவத்தினர் மண்மூடைகள் அடுக்கி பாதுகாப்பு அரண்களை அமைப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது.

இதேபோன்று தொண்டமானாறு இராணுவமுகாமும் பலபகுதிகளிலும் பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டும் படையினரைக்கொண்டுவந்து குவித்தும் பலப்படுத்தப்படுவதாகவும் தெரியவருகிறது.

வல்வை, தொண்டமானாறு இராணுவ முகாம்கள் பலப்படுத்துவதை உத்தேசித்து விடுதலைப்புலிகள் முகாம்களைச் சுற்றியுள்ள தமது 'சென்றி'களைமேலும் பலப்படுத்தியுள்ளதாகவும் தெரியவருகிறது.

## வடபகுதி நோக்கி உணவுக்கப்பல்கள்

சுண்டுக்குளி, வெள்ளி

கொழும்பிலிருந்து வடக்கே இரு கப்பல்கள் உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வரவுள்ளன.

இவற்றில் 'றுகுணு' என்னும் கப்பல் 950 தொன்எடையுள்ள அரிசியுடனும், 'மாத்தறை' என்னும் மற்றுமொரு கப்பல் 950 தொன் மவுடனும் வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (கி)

### 3- வது நாளாக

## கடையடைப்பு லொறி சேவைகள் நிறுத்தம்

யாழ்ப்பாணம், சனி

யாழ். வர்த்தகர் சங்கம் யாழ். முஸ்லிம் போக்குவரத்து ஒன்றியம், வடபிரதேச போக்கு வரத்துச் சங்கம் ஆகியவை இணைந்து நடாத்துவரும் கடையடைப்பு லொறிச்சேவை நிறுத்தம் நேற்று 3வது நாளாக நடைபெற்றது. (ச)

## உண்ணாவிரதம்

சுழிபுரம் வெள்ளி

சிறையில் உண்ணாவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக ஒரு நாள் உண்ணாவிரத பிரார்த்தனை வழிபாடு செய்யும் நிகழ்ச்சியை சுழிபுரம் பஞ்சாயித சபையினர் இன்று சனிக்கிழமை பறுளை விநாயகர் ஆலயத்தில் நடத்தவுள்ளனர்.

★

யாழ்ப்பாணம், சனி

வெலிக்கடை, பூஸா சிறைகளில் சாகும்வரை உண்ணாவிரதமனுஷ்டிக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து தெல்லிப்பழை தென்மேற்கு பிரஜைகள் குழு இன்றுகாலை 7 மணி முதல் விழிசிட்டி ஞான வைரவர் கோவில் முன்றலில் ஒருநாள் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கவுள்ளனர், (வா)

உடுவில், வெள்ளி

வெலிக்கடை, பூஸா முகாம்களில் சித்திரவதையை எதிர்த்து உண்ணாவிரதம் இருந்து வரும் தமிழ்பேசும் அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக ஒரு நாள் உண்ணாவிரதத்தினை உடுவில் பகுதி மக்கள் இன்று காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை உடுவில் மானிப்பாய் வீதியில் உள்ள ஸ்ரீ சிவஞானப்பிள்ளையார் கோவில் முன்பாக ஒன்று கூடி அனுஷ்டிக்கவுள்ளனர் (வா)

★ ★ ★

யாழ்ப்பாணம், சனி

வெலிக்கடை, பூஸா தடுப்பு முகாம்களில் உண்ணாவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு இன்று காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியில் அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படும்.

இதற்கான சகல ஒழுங்குகளையும் வெகுஜன அமைப்புகளின் கூட்டுக்குழு காரைநகரிலே மேற்கொண்டுள்ளது.

## நாளைஏழாலையில் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம். சனி

'விசாரணை செய் அல்லது விடுதலை செய்' என்ற கோரிக்கையை முன்வைத்து சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் தமிழ்இளைஞர்களுக்கும் யுவதிகளுக்குப் ஆதரவு தெரிவித்து நாளை ஞாயிற்றுக்கிழமை ஏழாலைப் பகுதி மக்கள் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கவுள்ளனர்

ஏழாலை மேற்கு உதயசூரியன் அறிவக முன்றலிலும் ஏழாலை தெற்கு தமிழ்ப் பொதுப்பணி மன்ற முன்றலிலும் உண்ணாவிரதம் நடைபெறவுள்ளன.

உண்ணாவிரதம் நாளை பிற்பகல் முடிவுற்றதும் பொதுக் கூட்டம் நடைபெறும்.

### அச்சுவேலியில்

அச்சுவேலி அச்சுநாதர் புனிதவளனார் ஆலய முன்றலில் அப்பகுதி பொதுமக்களே இன்று உண்ணாவிரதம் அனுஷ்டிக்கவுள்ளனர்.

### கிளிநொச்சியில் பதற்ற நிலை

## உருத்திரபுரம் பரந்தன் பகுதிகள் முன்னேற்றம்

கிளிநொச்சி, வெள்ளி

கிளிநொச்சிநகரம் கடந்த மூன்று மாதகாலமாக பதற்ற நிலையில் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதைத்தொடர்ந்து உருத்திரபுரம், பரந்தன் ஆகிய பகுதிகள் துரிதகதியில்முன்னேற்றமடைந்துவருகின்றன.

கிளிநொச்சிநகரில் இயங்கி வந்த தொழிற்சாலைகள். கடைகள், தனியார் வைத்திய சாலைகள். பரந்தனிலும் உருத்திரபுரத்திலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இ)

## தமிழர் கலாசார அவையின் கவின் கலையரங்கு

யாழ்ப்பாணம், சனி

தமிழர் கலாசார அவையினர் வாராந்த கவின்கலை ரங்கின் இவ்வார நிகழ்ச்சிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் யாழ் வின்ஸர் கலைஅரங்கில் நடைபெறவுள்ளது.

நீண்ட நாட்களுக்குப்பின்னர் அளவெட்டி நாதஸ்வர இசைவேந்தர்களான என். கே பத்மநாதன், செ. சிதம்பரநாதன் ஆகியோர்இணைந்து நாதஸ்வரம் வாசிக்க அளவெட்டியூர் தவில்மேதைகளான குமரகுருவும், லயஞான குபேரபூபதி அமரர் தெட்சணமூர்த்தி அவர்களின் மகன் சங்கரும் தவில் வாசிக்கும் நிகழ்ச்சி இவ்வார அரங்கின் சிறப்பம்சமாக மிளிரவுள்ளது

தமிழர்கலாசார அவையின் மானிப்பாய் பிரிவினர் வழங்கும் விடுதலைகீதம்மெல்லிசை நிகழ்ச்சியும் 'சுதந்திரப் பறவைகள் கலாசாரப் பிரிவினரின் பாப்பாக்களின் பிரகடனம் குழந்தைகள் நாடகமும் கவிதா நிகழ்வும் இவ்வாரம் அரங்கில் மற்றைய நிகழ்ச்சிகளாகும். (மா)

### கடையடைப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கருதி கடைகளைப் திறப்பதென்றும் ஆனையிறவுக்கப்பால் நடைபெறும் லொறிச் சேவைகளை மட்டும் தொடர்ந்தும் நிறுத்திவைப்பதென்றும் இணைப்புக்குழுவின் கூட்டத்தில் முடிவுசெய்யப்கட்டது.

வடபிராந்திய லொறி போக்கு வரத்துச் சங்கம் யாழ் முஸ்லிம் போக்குவரத்தொன்றியம் யாழ். வர்த்தகர் சங்கம் ஆகிய மூன்று அமைப்புக்களும் நேற்றைய தினம் விஷேசமாகக் கூடி இவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்து மேற்படி முடிவினை எடுத்தனர்.

இதேவேளை விடுதலை இயக்கங்களின் மாணவ அமைப்புக்களும் நடைபெற்று வந்த கடையடைப்பைக் கைவிடுமாறு கோரிக்கை விடுத்திருந்தமையும் குறிப்பிடத் தக்கது [எ]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O. Box 49 Telegram, Eelanadu Telephone: 22389—24126